DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்ற கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan Broker
Homelife/Future Realty Inc., Brokerage
Joy H.Selvanayagam Broker

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693
Broker
Mortgagetron.Com Inc;
416-291-0005.
List Sold Move with Sun
Thanks for referring me to your friends and family!

CAMSONICS
SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
RE/MAX
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
e-mail : raj.p@rogers.com

25வது ஆண்டை நோக்கி

Towards 25th Year in Publishing

www.canadauthayan.ca

UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

$1.00

Tel : 416-752-1524
Fax: 416-752-6703

Residential & Commercial
Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY


RAMU SIVAPATHASUNDARAM
Realtor
Commercial
Industrial
Investments
Dir: 416-732-2507
Office: 905-2019977
www.realtorramu.com

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்.

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA MORTGAGE SOLUTIONS INC.
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

உதயம் 1255 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday April 24, 2020


- **கொடிதான 'கோரோனா'வின் கொலை வெறி தணிவதாகத் தெரியவில்லை.**
- **உலகெங்கும் இறந்தவர்களின் எண்ணிக்கை இரண்டு இலட்சத்தை எட்டவிடாமல் மருத்துவ உலகம் போராடுமா?**
- **அமெரிக்காவில் 'கொரோனா' விற்கு பலியானவர்களின் எண்ணிக்கை ஐம்பதாயிரத்தோடு அடங்குமா?**
- **நேற்றுவரை கொரோனா பலிகொண்ட உலக மக்களின் எண்ணிக்கை இவை தான்.**



கடந்த பல வாரங்களாக, உலக மக்கள் அனைவரையும் நடுங்கச் செய்யும் கொரோனா வைரஸ் நேற்று வியாழக்கிழமை மாலை வரை பலிகொண்ட உலக மக்களின் எண்ணிக்கை கீழே காணப்படுகின்றன. உலகெங்கிலுமான மொத்த இறப்புக்கள்: 190,640. சில நாடுகளில் கோரோனா இறப்புக்கள் பின்வருமாறு அமைகின்றன:-

| | | | | |
|---|---|---|---|---|
| அமெரிக்கா: 49850 | இத்தாலி: 25551 | கனடா: 2150 | ஸ்பெயின்: 22157 | ஜேர்மனி: 5575 |
| சீனா: 4632 | பிரான்ஸ்: 21857 | ஈரான்: 5481 | இந்தியா: 721 | இலங்கை: 8 |

# உங்கள் இருவரதும் உடல்களை எரித்திட மனமின்றி, அக்கினிச் சுவாலை நிச்சயம் கரைத்திருக்கும்



நாகராஜா-புஸ்பராணி தம்பதியினரே! உங்கள் உடல் இன்று அக்கினியோடு சங்கமமாகியதை அறிந்தோம். நோயிலிருந்து உங்களைக் காப்பாற்ற முடியாமல் போனதால் அக்கினிச் சுவாலைகளிலிடமிருந்தும் உங்களைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது. மகிழ்ச்சியாக வாழ்ந்த உங்கள் இருவரையும் இயற்கையோடு சேர்ந்து வந்த நோய்க்கிருமி உங்களோடு எத்தனை நாட்கள் வாழ்ந்ததோ நாம் அறியோம் ஆனால் ஒட்டியிருந்து, உங்கள் வாழ்வை அல்லவா பறித்து விட்டது.

உங்கள் இருவரின் உடல்களையும் எரித்திட மனமின்றி, அக்கினிச் சவாலைகள் நிச்சயம் அவற்றைக் கரைத்திருக்கும். மென்மையான இதயம் கொண்ட உங்கள் இருவரையும் சிரித்த முகத்துடனே அந்த சுவாலைகள் வழி அனுப்பி வைத்திருக்கும் என்பதை நாம் அறிவோம். எங்களோடு நீங்கள் பயணித்த நாட்கள் இதமானவை. பொறுப்போடு எமக்காக கடமைகளை ஆற்றிய உங்கள் இருவருக்கும் இறுதிப் பயணத்தில் நாம் இல்லாதது, என்றும் எம்மை வருத்திய வண்ணமே இருக்கும். சென்று வாருங்கள்!

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Affidavits for immigration purposes;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tel : 647-344-6600
info@allinoneservices.ca, www.allinoneservices.ca

At Markham & Sheppard)
DR. SABESAN
DENTAL OFFICE
அனைத்து பல் வைத்திய சேவைகளுக்கும்
Dr.சபேசன் தங்கத்துரை
Dental Surgeon
Tel: 416-666-7770
1585 Markham Road, Unit 105
Scarborough, ON M1B 2W1
www.drsabesan.com
dental1585@gmail.com

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000
Visit GtaCredit.Com
* North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON AD TEAM

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7 905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905 794 4404

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
✓ Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க...
மோகன் சுப்பிரமணியம்
Broker of Record / President
Direct Line: 416-321-2300 Office: 416-291-3000
6888 14th Avenue, Markham ON Independently owned and operated
PROPERTY MAX Realty Inc. Brokerage

# SKN FINANCIAL

www.sknfinancial.com



அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்

- $ அவசரப் பணத் தேவையா? புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
- $ புதிய மனைஸ்ன வாங்குவதில் பணச்சிக்கலா?
- $ உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
- $ உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்குப் பலவிதமான திட்டங்கள் உள்ளன
- $ வட்டித் தொகைக்கு வரிவிலக்கு பற்றுச் சீட்டு வழங்கபடும்

முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டது

உங்கள் நகைகளுக்குப் பாதுகாப்பு!..

குறைந்த வட்டி!..[2% முதல்]

நிறைந்த பெறுமதி!...

www.sknfinancial.com

**SCARBOROUGH**
801 Markham Road
(Painted Post Plaza)
Markham & Ellesmere
647-729-5238

**BRAMPTON**
85 Kennedy Road South, Unit 33
( Next to TIM HORTONS )
Kennedy & Steeles
905-499-0800



# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

**ENGLISH & TAMIL – SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் Uthayan Publishers
EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
4062 Ellesmere Rd, Scarborough, ON, M1C 1J2,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
Email: uthayannews@yahoo.com Website: www.canadauthayan.ca

UTHAYAN உதயன் கதிரோட்டம்

# ஆட்சியை வழி நடத்தும் தலைவர்களையே கண்ணீர் சொரிய வைக்கும் கொடிதான நாட்களா இவை?

"கொரோனா" என்னும் கொடிய நோய்க்கிருமி தற்போது உலகெங்கும் தாண்டவமாடுகின்றது. கற்றவர்கள், விவசாயிகள், மதவாதிகள் ,நாஸ்த்திகர்கள், ஆட்சித் தலைவர்கள் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், செல்வந்தர்கள், என அனைத்து வகையானவர்களை பலி கொண்ட இந்த கொரோனா, தனது கொரில்லாத் தாக்குதல் போன்ற கொடிதான கொலை வெறியை நிறுத்துவதாகத் தெரியவில்லை.

இது வரை உலகெங்கும் உயிரிழந்த இரண்டு இலட்சத்தை எட்டும் உயிர்களுக்கு சொந்தமானவர்கள் மறைந்து விட்டார்கள். இறப்பதை விரும்பாமலே அவர்கள் கொரோனாவினால கொலை செய்யப்பட்டு விட்டார்கள்.

ஆனால், அவர்களது உறவினர்கள், பிள்ளைகள், வாழ்க்கைத் துணைகள், வாரிசுகள், அன்புகொண்டவர்கள் என எத்தனை இலட்சம் பேர் தலையில் இடி விழுந்தது போன்ற கொடிய வேதனையுடன் தங்கள் நாட்களைக் கழிப்பார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

அவர்களது எதிர்காலம் கேள்விக்குறியாகி விட்டது. இன்னும் "கொரோனா" எம்மைத் துரத்தும் படலம் நிறுத்தப்படவில்லை.

அதற்காக முயற்சிகளில் உலகெங்கும் இலட்சக் கணக்கானவர்கள் இரவு பகலாக உணவை மறந்து தூக்கத்தை அர்ப்பணித்து இயங்கிக் கொண்டு வருகின்றார்கள்.

ஆட்சியில் அமர்ந்திருக்கும் அரசியல் தலைவர்கள் தொடக்கம் அவர்களுக்கு அடுத்து உள்ள அமைச்சர்கள் அதிகாரிகள், மருத்துவர்கள், விஞ்ஞானிகள், தாதிகள் என எமது பட்டியல் தொடர்ந்து கொண்டே போகின்றது. இந்தப் பட்டியலில் இன்னும் நூற்றுக்கணக்கான தரங்களில் பணியாற்றுகின்றவர்களும் அடங்குகின்றார்கள்.

எவரது சொல்லையும் கேட்காமல் கொரோனா அடம் பிடிக்கின்றது. குறைந்தது இத்தனை மனிதர்களை நாளொன்றுக்கு கொன்றுவிட வேண்டும் என்று துடிக்கின்றது. ஒவ்வொரு நாட்டிலும் ஆட்சித் தலைவர்கள் தொடக்கம் சாதாரண குடிமகன் வரையிலும் காலையில் எழுந்து, அல்லது நள்ளிரவில் தூக்கம் கலைந்து இன்று எத்தனை பேர் கொரோனாவினா-ல் பலியெடுக்கப்பட்டுள்ளார்கள் என்றே கவனிக்கின்றார்கள். எத்தனைபேர் சிகிச்சை வெற்றியளித்து வீடு திரும்பியிருக்கின்றார்கள் என்பதை கவனிப்பதாகவே தெரியவில்லை.

இது இவ்வாறிருக்க, மற்றொரு பக்கத்தில் கொரோனாவினால் இறந்தவர்களை விட உலகெங்கும் பட்டினியால் வாடுகின்றவர்கள் கோடிக்கணககில் வருந்திய வண்ணம் வாழ்நாட்களை எண்ணிக்கொண்டு உள்ளார்கள். அவர்களுக்கு உதவிகளை வழங்க செல்வந்தர்களும் மனிதநேயம் கொண்டவர்களும் ஆதரவுக் கரம் நீட்டுவதை தினமும் நாம் செய்திகள் மூலம் அறிந்து வருகின்றோம். இவ்வாறான நற்காரியங்களால் மனிதம் இன்னும் எங்களோடு சேர்ந்து ப யணிக்கின்றது என்பதை நாம் நன்கு உணர்கின்றோம்.

இப்படியாக, உலகெங்கும் சாதாரண மக்கள் தங்கள் வாழ்வோடும் நோய் தொடர்பான மரண பயத்தோடும் வாழ்ந்து வருகையில் ஆட்சியில் உள்ளவர்கள் கூட வருந்தும் சம்பவங்கள் பல இடம்பெற்றுள்ளன என்பதை செய்திகள் வாயிலாக அறிகின்றபோது, நாமும் அவர்களுக்காக கண்ணீர் விடுவதோ அன்றி கவைலைப்படுவதோ தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது.

நாம் வாழும் கனடா தேசத்தின் பிரதமர் உலகெங்கும் நல்லதோர் தலைவராக காட்சி தருகினறார். அவர் எவ்வாறு நல்லவராகத் பணியாற்றினாலும், "கொரோவின்" பிடிக்குள் அகபபட்ட அவரது அன்புத் துணைவியார் நீண்ட நாட்களுக்கு தனித்திருந்து தன்னை குணமாக்கிக் கொண்டார். அந்த தம்பதியினது ஆசைக் குழந்தைகள் கூட தனித்திருந்த வண்ணம் தமது தாய் தந்தையருக்கும் இடையூறு செய்யாமல் இருந்திருக்கின்றார்கள்.

கடந்த ஒரு மாத காலமாக எமது பிரதமர் அவர்கள் தனது குடும்பத்திற்காக வாழாமல், நாட்டு மக்களுக்காகவே வாழ்ந்தார் என்பது நன்கு நிரூபணமாகியது. ஆனால் தனது துணைவியார் குணமாகி வீடு வந்ததும் பிரதமரும், துணைவியாரும், பிள்ளைகளும் ஒரிரு நாட்கள் தனித்திருந்த தங்கள் நீண்டநாள் பிரிவின் கொடுமையை தணிக்க முயன்ற போது, கனடாவின் தேசிய ஊடகங்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அந்த அரிதான தலைவர் மீது அவதூறான குற்றச்சாட்டுக்களை அள்ளி வீசினார்கள்.

அப்போது அந்த பெருமகனாம் பிரதமர அவர்களின் கண்களிலே நீர் நிறைந்து வழிந்ததை நாம் கண்டு வருந்தினோம்.

இது போன்றே, நேற்று ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, ஒரு ஊடகவியலாளர் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த ஒன்றாரியோ முதல்வர் டக்போர்ட் அவர்கள், தன்னைபற்றிய ஒரு தவறான விமரசனத்தை முன்வைத்த ஆங்கில தினசரி ஒன்றைப் பற்றி குறிப்பிட்ட போது, கண்கள் கலங்கிய வண்ணமும் அவரது வார்த்தைகள் நடுக்கத்தோடு வெளிவந்ததையும் நாம் எம்மில் பலர் அவதானித்து இருக்கலாம்.

இவ்வாறான அரசியல் தலைவர்களையும் மாகாண முதல்வர்களையும் கலங்கவைக்கும் பல சம்பவங்களை நாம் தொடர்ச்சியாகப பார்க்கின்றோம். இவை அனைத்தும் எம்மில் பலருக்கும் மிகுந்த வேதனையை அளித்திருக்கும். இதைப் போன்றே, நோவோஸ் ஸ்கோசியா மாகாணத்தில் "கொலை வெறி" கொண்ட ஒரு துப்பாககிதாரி, நடத்திய படுகொலைகளினால் அதிர்ந்து போன மக்கள் ஒரு புறம், அந்த மாகாணத்தின் முதல்வர் இன்று ஊடகவியலாளர்களோடு நடத்திய கலந்துரையாடலின் போது கூட கண்ணீர் கண்களில் தோன்றி மறைய வார்த்தைகள் தடுமாறி பதிலளித்த ஒரு கவலைக்குரிய காட்சியை நாம் தொலைகாட்சியில் பார்த்து நாமும் கலங்கினோம்.

"இந்த கொரோனாவின் தாக்குதலால் திண்டாடும் எங்களுக்கு துப்பாக்கித் தாக்குதல்களின் விளைவுகளை எப்படி தாங்கிக் கொள்வது? என்று அந்த மாகாண முதல்வர் ஊடகவியலாளர்களிடம் பகிர்ந்து கொண்டமையை நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இதே போன்று இனிவரும் நாட்களில் எத்தனை தலைவர்கள் இவ்வாறு கலங்கவுள்ளார்களோ. வரப்போகும் நாட்களுக்குத் தான அது வெளிச்சம்.!

உங்கள் பணத்தேவைகளுக்கு
குறைந்த வட்டிவீதத்தில் அடைவு பிடிக்கப்படும்

PAWN BROKERING
பழைய பவுண்கள் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளப்படும்
Cash Point
துரித பணமாற்றுச்சேவை
வெளிநாட்டு நாணயங்கள்
வாங்கவும் விற்கவும்.

Cash Point
3852 FINCH AVENUE EAST,. UNIT G30,
SCARBOROUGH, ON, M1T 3T9
TEL: 416-284-7000

NEED HELP WITH YOUR TAXES? WE GOT YOU COVERED!!
உங்கள் வரித்தேவை, வியாபாரக் கணக்கு எதுவாயினும்,
திறமை, அனுபவம், தேர்ச்சி பெற்ற கணக்காளர்.
- Corporate Tax
- Personal Tax Planning
- Accounting
- Financial Statements
- Business Plan & Proposals
- For all your Business Needs

Call: 416 293 1616
416.438.9799
www.aricpa.ca · ari@aricpa.ca
MP Accounting & Finance Services Inc
1750 Brimley Road, Suite 213,
Toronto, ON. M1P 4X1
ARI A. ARIARAN CPA, CGA
Chartered Professional Accountant

# ஸ்ரீ ஆதிபராசக்தி இந்து ஆலயம்



**நித்திய பூசைகள் இடம்பெறுகின்றன.**

**3021 Markham Rd, Unit 45,46 & 47**

**Scarborough, Ontario M1X 1L8**

**Tel.No: (416) 293-1226**

*ஆலயத்தில் பிரதி தினமும் செவ்வாய்க்கிழமைகளில் கட்டணமில்லாமல் இலவசமாக எலுமிச்சம் பழ விளக்கேற்றி அம்பாளை கூட்டு வழிபாடு செய்யும் நிகழ்ச்சி கடந்த 17 ஆண்டுகளாக நடைபெறுகிறது என்பதை மக்களுக்கு தெரியப்படுத்துகிறோம்.*

குறிப்பு: ஐயா அவர்களால் சாதகம், பொருத்தம் பார்த்தல், பொதுப்பலன் சொல்லுதல், வியாபார விருத்தி, சாந்தி பரிகாரம் அனைத்தும் ஒழுங்கு செய்யப்படும்.

பிரம்மஸ்ரீ சந்திரமௌலி சாஸ்திரிகள்
ஆலய நிர்வாகம்

# Carefirst Family Health Team

Carefirst Family Health Team



## *Accepting New Patients*

## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

**Clinic Location:**

**Carefirst One-Stop Multi Services Centre**

**300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2**

**Tel: (416) 502-2029, www.carefirstfht.com**



# "கொரோனா" நோயாளிகளைக் காப்பாற்றுவதற்காக குடும்ப உறவுகளைப் பிரிந்திருந்து மருத்துவப் பணியாற்றும் பெருந்தகைகள்...



இரண்டு நாட்களுக்கு முன்னர். அலுவலகத்திலிருந்தபோது, மேசையிலிருந்த தொலைபேசி ஒலிக்க, கையில் எடுத்தேன். எனக்கு 30 வருடங்களுக்கு மேலாக தெரிந்த ஒரு நண்பர் அழைத்தார். எப்போதும் போலவே நிதானமாகவே பேச்சை ஆரம்பித்தார். நான் அப்படி அல்லவே! இப்போது மாற்றப்பட்டவனாக....

நான் இடர்களிலிருந்து விடுபட்டு தேற வேண்டும் என்று உற்சாகமூட்டும் வகையில் உரையாடலை ஆரம்பித்து எனது கடமைகளை தொடர்ந்து சிறப்பாகவே ஆற்றும் படியும் கேட்டுக்கொண்டார். மேலும் பல விடயங்களைப் பகிர்ந்து கொண்டோம்.

தாயகத்தில் அவர் ஒரு ஆசிரியர், இங்கு முன்னாள் வங்கி உத்தியோகத்தர், தற்போது வீடு விற்பனை முகவர், வீட்டுப் பரிசோதகர், இன்னும் சமூகத்துடனான பல தொடர்புகளைக் கொண்டவர்.

கொரோனாவைப் பற்றியும் வைத்தியசாலைகள் பற்றியும் மரணங்களைப் பற்றியும் (Front Line) என்னும் முன்வரிசையில் நோயாளர்களை காப்பாற்ற இரவு பகலாக அர்ப்பணிப்புடன் பணியாற்றும் வைத்தியர்கள், தாதியர்கள், ஏனைய பணியாளர்கள் பற்றியெல்லாம் பல விடயங்களைப் பகிர்ந்து கொண்டு என்னை சற்று விழிப்படையச் செய்தார்.

இந்த "கொரோனா" நாட்களில் வைத்தியசாலைகளில் அவர்கள் அனைவரும் ஆற்றும் சேவைகள் பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார். தமிழர் சமூகத்தில் பல வர்த்தக நிறுவனங்கள் வைத்தியசாலை பணியாளர்களுக்கு மூன்று நேரமும் சத்தான உணவை, அதற்குரிய பாதுகாப்பும் சுகாதார எற்பாடுகளும் கொண்டு அமைக்கப்பெற்ற ஒரு இடத்தில் சமைத்து, வழங்கி வரும் அற்புதமான திட்டம் தொடர்பான பல தகவல்களைத் தந்தார். தானும் அந்த பணிக்காக பலரோடு தொடர்பு கொண்டு உதவி வருவதாகச் சொன்னார்.

நான் இன்னும் விழிப்படைந்தவனாக ஒரு கேள்வியைக் கேட்டேன்.

"மாஸ்டர்! (Front Line) எனப்படும் முன்வரிசையில் அதுவும் நோயாளர்களுக்கு மிக அண்மித்து கடமையாற்றும் இந்த வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் பணியாளர்கள் எவ்வாறு இந்த ஆபத்திலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்கின்றார்கள்?" என்று வினாவினேன்.

அதற்கு காரணங்கள் பல இருந்தன. அவரது இரண்டு பிள்ளைகளில் மூத்தவரான மகள் ஒரு வைத்தியர். அடுத்தவர் ஒரு மகன். அவரும் ஒரு வைத்தியராக விரைவில் வெளியேறவுள்ளவர்.

அவரது மகள் தற்போதைய "கொரோனா" சிகிச்சைகள் தொடர்பாக பல பொறுப்புக்களைக் கொண்ட வைத்தியப் பணிகளை ஆற்றிவருபவர். அவரது சேவைகள் மற்றும் சிகிச்சை முறைகள் பற்றியெல்லாம் தமிழ் வானொலிகள் பல தடவைகள் நேர்காணல்கள் செய்திருந்தன.

அதற்கு மேலாக Globe and Mail என்னும் ஆங்கிலப் பத்திரிகை கூட வரை பேட்டி கண்டு அச்சுப் பதிப்பிலும் ஒளிப்பதிவாகவும் வெளியிட்டிருந்தது. இதைப் பற்றியெல்லாம் நானும் அறிந்திருந்தேன். எமது சமூகத்தில் பலர் அந்த பேட்டியை வாசித்தும் பார்த்தும் அறிந்தும் அந்த இளம் பெண் வைத்தியரைப் பாராட்டியதை சில வாரங்களுக்கு முன்னர் கேள்வியுற்றேன்.

அவர் ஒரு ஆசிரியர் என்றபடியால், எனது கேள்விக்குரிய பதிலையும் விளக்கத்தையும் வைத்தியரான தனது மகளின் சேவைகள் ஊடாக சொல்லலாம் என்று ஆரம்பித்தார். தற்போதைய அவசரகால நிலையில் வைத்தியரான அவரது மகள், தனது குடும்ப வாழ்க்கையை எவ்வாறு அர்ப்பணிக்கின்றார், அவரது அர்ப்பணிப்பான வைத்திய சேவைகளால் அவரது 5 வயதும் 2வயதும் கொண்ட இரண்டு பிள்ளைகள் மீது அவர் காட்டவேண்டிய அன்பு அக்கறை அணைப்பு எல்லாம் எவ்வாறு விலகிப்போயுள்ளன. என்றெல்லாம் மிகவும் விளக்கமாகவும் உணர்ச்சி வசப்பட்டவராகவும் தொடர்ந்து விபரிக்கத்தொடங்கினார்.

அவர் கூறிய விடயங்களில் பல எங்கள் உடல்களை அதிரவைக்கும் செய்திகளாக இருந்தன. சில விடயங்கள் வெளிப்படையாக எழுதப்பட முடியாதவை. சில கண்ணீரை வடிய விடும் துன்பியல் படலங்கள்.

வானொலிகளிலும் பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும் அடிக்கடி பேசப்படுகின்ற இந்த (Front Line) எனப்படும் முன்வரிசையில் அதுவும் நோயாளர்களுக்கு மிக அண்மித்து கடமையாற்றும் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகிய இந்த அர்ப்பணிப்பான சேவையாளர்களின் தற்கால வாழ்க்கை இவ்வளவு சவால்களும் சிரமங்களும் கொண்டவையா? என்று எனக்குள்கேட்டுக் கொண்டேன்.

அவர் என்னிடத்தில் பகிர்ந்து கொண்ட பல விடயங்களில் மனதைத் தொட்ட இரண்டை இங்கே பதிவு செய்ய விழைகின்றேன்

முதலாவது, வைத்தியரான அவரது மகளது குழந்தைப் பருவத்தில்..

---

மூன்றாம் வகுப்பில் அவரைத் தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ள பெற்றோர் ஒரு தமிழாசிரியையிடம் அனுப்புகின்றார்கள். வகுப்புகளில் அவர் மிகுந்த ஆர்வத்துடன் உள்ளதாக பெற்றோருக்கும் தகவல்களை அவ்வப்போது தெரிவிக்கின்றார் ஆசிரியை.

ஒரு நாள் ஆசிரியை வகுப்பறையில் மாணவர்களுக்கு ஒரு சிறிய பந்தி ஒன்றை எழுதும் படி வேண்டுகின்றார். பிற்காலத்தில் நீங்கள் என்ன துறைகளில் கற்று பின்னர் எந்த தொழில் செய்யப் போகின்றீர்கள்? என்பதே அந்த தலைப்பு.

அப்போது தற்போது வைத்தியரான அந்த மூனறாம் வகுப்பு மாணவி தான் படித்து உயர்ந்து, ஒரு வைத்தியராக வரவேண்டும் என்றும் அதன் மூலம் சமூகத்திற்கு சேவையாற்றுவதையே முக்கிய பணியாகக் கொள்வேன் என்ற தனது எண்ணத்தை எழுத்தில் வடித்து, அதனை ஆசிரியையின் வேண்டுகோளின் படி தனது குழந்தை குரலில் வாசித்ததாகவும்

பின்னர் அந்த சிறுமியின் எதிர்காலம் பற்றிய உயர்ந்த எண்ணங்களுக்கு மதிப்பளித்த அந்த ஆசிரியை அந்த காகிதத்தை மிகவும் பாதுகாப்பாக வைத்திருந்து பின்னாளில் பல வருடங்களுக்குப் பின்னர் ரொறன்ரோப் பல்கலைக் கழகத்தில் அவர் வைத்தியராகப் பட்டம் பெற்றதை கொண்டாடும் வகையில் ஏற்பாடு செய்யப்பெற்ற ஒரு சிறிய நிகழ்வில் அழகிய முறையில் பதித்து "புதிய" வைத்தியரிடம் பரிசளித்ததிருந்தாராம்.

இரண்டாவது, சில வாரங்களுக்கு முன்னர்

---,

அந்த இளம் பெண்வைத்தியரின் குடும்பத்தில் இடம்பெற்ற ஒரு கருத்துப் பரிமாற்றம்:-

"கொரோனா"வின் அச்சுறுத்தல் பயணம் சீனாவிலிருந்து ஆரம்பித்து, கடல் வழியாகவும், ஆகாய மார்க்கமாகவும், தரையின் மீதாகவும் மனிதர்கள் ஊடாகவும் பரவிப் பெருகி பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் குடித்துக் குதறத் தொடங்கியது.

இந்த ஆபத்தை உணர்ந்து கொண்டு கனடாவில் உள்ள மத்திய, மாகாண மற்றும் உள்ளூராட்சி அரசுகளின் கீழ் உள்ள சுகாதாரத் துறைகளும் விழித்துக்கொண்டன. இந்த தேசத்தில் பல மாகாணங்களில் மரணங்கள் சம்பவித்து எங்கும் ஒரே மரண பயம் அனைவரதும் மனங்களில்..

ரொரன்ரோ பெரும்பாகத்தில் உள்ள வைத்தியசாலைகளுக்கும் பல பொறுப்புக்கள் சுமத்தப்பட்டன. இவை யெலலாம் சாதாரண நாட்களில் இட்ம்பெறும் நடவடிக்கைகள் அல்ல. அவசரகால நிலை அமுல் செய்யப்பட்டு வைத்தியர்களதும் தாதிகளினதும் சேவைகளும் அத்தியாவசிய பணிகளாக சட்டமாக்கப்பெற்ற ஒரு நிலை.

மிகவும் ஆபத்தான கட்டம்.

"கொரோனா"வால் பீடிக்கப்பட்ட அல்லது ஆரம்ப நிலை நோயாளிகளுக்கு மிக அருகில் இருந்து வைத்திய சிகிச்சைகள் வழங்க வேண்டிய கட்டாயம் அனைத்து வைத்தியர்களுக்கும் ஏற்பட்டது.

நீண்ட கால அனுபவமும், அர்ப்பணிப்புள்ள சேவையும் ஒன்றுக்கு மேற்பட்ட வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றிய ஒருவராகவும் அடையாளம் காணப்பட்ட நண்பரும் ஆசிரியருமான இவரது மகளுக்கும் மிகவும் அதிகமான பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பெற்றன.

பாலகர்களான அவரது குழந்தைகளின் பராமரிப்பு, அவர்கள் மீது காட்டிய அன்பு, அக்கறை, அணைப்பு, மற்றம் கணவன் தாய் தநதையர் என்ற அந்த குடும்பச் சூழலுக்குள் இதுவரை காலமும் இருந்து கொண்டு வைத்தியராகப் பணியாற்றிய அவருக்கு முன்பாக புதிதான சவால்கள் தோன்றின.

அதுவும் அதிகளவு நேரம் வைத்தியசாலைகளில் ஆபத்தான நிலையில் உள்ள நோயாளிகளுக்காக அங்கேயே தங்கியிருந்து பணியாற்ற வேண்டிய கட்டாயம். ஆனால் கை நிறையச் சம்பளம்.... என்ன செய்வது,இழப்பு ஏதாவது நடந்து விட்டால்?...

இதற்காகவே வீட்டில் ஒரு சிறிய கலந்துரையாடல் இடம்பெறுகின்றது. குழந்தைகளுக்காகவும் குடும்பத்திற்காகவும் அந்த பெண் வைத்தியரின் உயிர்ப் பாதுகாப்பிற்காகவும் அவர் ஏன் வைத்தியப் பணியிலிருந்து விலகிக் கொள்ளக் கூடாது? என்ற கேள்வி முன்வைக்கப்படுகின்றது.

. வைத்தியரின் கணவர் ஒரு தகவல் தொழில் நுட்பத் துறை சார்ந்த நிறுவனத்தை சொந்தமாகவே நடத்தி வருகின்றவர். நிறையவே சம்பாதிக்கின்றவர். அவர் கூறுகின்றார்.

"நீங்கள் சம்பாதிக்கத் தேவையில்லை. உங்கள் உயிரும் குழந்தைகளிற்கு வழங்கப்பட வேண்டிய அன்பும் அணைப்பும் தான் முக்கியம். நீங்கள் வீட்டிலேயே இருங்கள்" என்கிறார்

தந்தையும் மாமனுமாகிய எனது நண்பரும் தனது மனைவி சகிதம் மகளிடம் வேண்டுகின்றனர். "கணவரின் வேண்டுகோளை ஏற்றுக்கொள்" என்று.

ஆனால் இளம்பெண் மருத்துவர். மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொள்கின்றார்.

"எனது பிள்ளைகளை இன்னும் சில மாதங்களுக்காகவேனும் பார்த்துக்கொள்ளுங்கள். நான் இன்னொரு வீட்டில் தனியாகவே இருந்து என்னை பாதுகாத்துக் கொண்டு, நோயாளர்களைக் காப்பாற்றும் சேவைகளைச் செய்தின்றேன். எனது சிறுவயதுக் கனவை நனவாக்க தொடர்ந்து என்னோடு ஒத்துழையுங்கள். தயவு செய்து என்னை அனுமதியுங்கள். அவர்களை இடை நடுவில் விட்டு விட்டு என்னால் வீட்டில் இருக்க முடியாது."

கெஞ்சல் தொடர்கின்றது.

இறுதியில் ஒரு முடிவு எடுக்கப்படுகின்றது.

அந்தப் பெண் வைத்தியர் தனது கணவர் மற்றும் பிள்ளைகளோடு வாழ்ந்த வீட்டில் அவர் மட்டும் தனியா தன்னை தனிமைப் படுத்திய வண்ணம் இருப்பது.....

கணவரும் குழந்தைகளும் வைத்தியரின் பெற்றோரின் வீட்டில் இருப்பது.

தற்போது நோயாளிகளைக் கவனிப்பதும், அவர்களை பாப்பாற்றும் வைத்திய முறைகளைக் கையாளுவதும் தான் இந்த பெண் வைத்தியரின் முக்கிய கடமையாக உள்ளது.

எனக்கு ஆறுதல் சொல்ல வந்த அந்த நண்பர் தனது சொந்தக் கதைகளை என்னோடு பகிரந்து கொண்டு நாமெலலாம் அறிந்து கொள்ளாத பல விடயங்களை பகிர்ந்து கொண்டார்.

வீட்டுக்கும் வைத்தியசாலைக்கும் மாறி மாறி பயணிப்பது...... வீட்டு வாசலில் பெற்றோரோ அன்றி கணவரோ கொண்டு வந்து வைத்துவிட்டுப் போகும் உணவை அவசர அவசரமாக உண்பது...... வைத்தியசாலைகளிலிருந்து வரும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிப்பது.....,தேவையான ஆலோசனைகளை தனது சக வைத்தியர்களுக்கும் தாதிகளுக்கும் வழங்குவது......ரொரன்ரொ பகுதியில் உள்ள ஏனைய வைத்தியசாலைகளுக்குத் தேவையான பாதுகாப்பு உபகரணங்களை அல்லது மருந்துப் பொருட்களை அனுப்பும் வகையில் செயற்படுவது....., முன்வரிசையில் பணியாற்றுகின்றவர்களுக்கு தேவையான உணவை பெறும் முயற்சிகளில் வெளியில் உள்ள தொண்டர்களோடு விலகியிருந்த வண்ணமே பணியாற்றுவது.... அத்துடன் தனது அன்புக் கண்வரோடும் ஆசைக் குழந்தைகளோடும். இணைய வழி ஊடாக அவர்கள் முகங்களைப் பார்த்தும் வார்த்தைகளைக் கேட்டு ஆறுதல் அடைவதுமாக இந்த இளம் வைத்தியரின் நாட்கள் தற்போது கழிகின்றன.

என்னை உற்சாகப்படுத்தும் வண்ணம் இன்று காலை என்னை அழைத்த நண்பர் "மீண்டும் கதைப்போம்" என்று சொல்லிய வண்ணம் தொலைபேசியிலிருந்து விடைபெற்றார்.

இந்த வைத்தியரான தமிழ் மகளைப் போன்று கனடாவில் மட்டுமல்ல, எமது தாயகத்திலும், உலகின் அனைத்து நாடுகளிலும் இலட்சக்கணக்கான வைத்தியர்கள் உட்பட தாதிகள் போன்ற முன்வரிசைப் பணியாளர்கள், இவ்வாறான அர்ப்பணிப்புடன் மருத்துவ சேவை ஆற்றுவதால் தானே "கொரோனா" இறப்புக்களை கட்டுப்படுத்தி, பலருக்கு வெற்றிகரமான சிகிச்சை அளித்து மீண்டும் அவர்கள் தங்கள் உறவுகளோடு இருப்பதற்கு அனுப்பி வைக்கின்றார்கள். எங்கேயோ ஒரு இடத்தில் நான் வாசித்தது எவ்வளவு உண்மையாகின்றது. ஆமாம்! இவர்கள் மனிதர்களைவ ிட மேலானவர்கள். சில கடவுளுக்கு அருகில் வாழக் கூடியவர்கள் போலும்..

---

***நாகமணி லோகன் லோகேந்திரலிங்கம்***

# கொரோனா வைரஸ் நோய் (COVID-19) பரவுவதைக் குறைப்பதற்கு உதவவும்

## கொரோனா வைரஸ் நோய் (COVID-19) பரவுவதைக் குறைப்பதற்கு பின்பற்ற வேண்டியவை:

உங்களின் உள்ளூர் பொது சுகாதார அதிகாரியினது ஆலோசனையைப் பின்பற்றல்.

நீரையும் சவர்க்காரத்தையும் உபயோகித்து உங்களின் கைகளை அடிக்கடி குறைந்தது 20 செக்கன் வரையாவது நன்றாகக் கழுவிக்கொள்ளல்.

நீரும் சவர்க்காரமும் கிடையாத சந்தர்ப்பத்தில் கைகளைக் கழுவித் தொற்றுநீக்கக்கூடிய மதுசார காரமான கரைசல்களையும் பதார்த்தங்களையும் உபயோகித்து கைகளைக் கழுவிக்கொள்ளல்.

உங்களின் கண், மூக்கு அல்லது வாய் முதலியவற்றைத் தொடுவதிலிருந்து தவிர்ந்துகொள்ளல்.

வைரஸ் நோய் தொற்றியுள்ள நபர்களுடன் நெருங்கி தொடர்புகொள்வதைத் தவிர்ந்துகொள்ளல்.

கைகளில் படாதவாறு மறைக்கக்கூடிய துணிகளினால் மறைத்து தும்முதல் இல்லது இருமுதல்.

2 m

இயலுமான வரை வெளியே செல்லாமல் வீடுகளில் இருத்தல், மற்றும் நீங்கள் வீட்டை விட்டு வெளியே செல்ல வேண்டுமானால், தொடுகையின்றி தள்ளிநிற்க வேண்டிய தூரத்தை (அண்ணளவாக 2 மீற்றர்) பேணுதல்.

## நோய் அறிகுறிகள்

COVID-19 வைரஸின் நோய் அறிகுறி மிகவும் இலகுவானது அல்லது கடுமையானது. வைரஸ் தொற்றிய பின்னர் இந்த நோய் அறிகுறிகள் தென்படுவதற்கு 14 நாட்கள் எடுக்கலாம்.

**காய்ச்சல்**
(38 °C செல்சியேற்றுக்கு சமனான அல்லது அதற்கு அதிகளவு உடல் வெப்பநிலை)

**இருமல்**

**மூச்செடுத்து விடுவதற்கு கடினமாக இருத்தல்**

## உங்களுக்கு இந்த நோய் அறிகுறிகள் இருந்தால்

மற்றவர்களுக்கு நோய் பரவுவதைத் தவிர்த்துக்கொள்வதற்கு வீட்டிலே தனிமைப்படுத்திக்கொள்ளல்.

முதியவர்களை அல்லது மருத்துவ ரீதியில் பலவீனமான நபர்களை சென்று பார்ப்பதைத் தவிர்த்துக்கொள்ளல். இவர்களுக்கு கடுமையான அதிகமான நோய் ஆபத்து ஏற்படலாம்.

உங்களின் சுகாதாரப் பராமரிப்பு நிபுணரை அல்லது உள்ளூர் பொது சுகாதார அதிகாரியை சென்று பார்ப்பதற்கு முன்னர் உடடியாக அத்தகையவர்களை அழைத்தல்.

இந்த நோய் அறிகுறிகள் மேலும் உக்கிரமடைந்தால், உடனடியாக உங்களின் சுகாதாரப் பராமரிப்பாளரை அல்லது பொது சுகாதார அதிகாரியை நாடி, அவர்கள் வழங்கும் அறிவுரைகளைப் பின்பற்றுதல்.

## COVID-19 பற்றிய தகவல்களுக்கு:

1-833-784-4397 @ canada.ca/coronavirus

Public Health Agency of Canada / Agence de la santé publique du Canada

Canada

# பரவுவதைத் தடுக்கவும்.

## கோவிட்-19 மிகவும் ஆபத்தானது.

## வீட்டிலேயே இருக்கவும்.

## உயிர்களைக் காப்பாற்றுங்கள்.



**ontario.ca/coronavirus**
இணையத்துக்கு வருகை தாருங்கள்
ஒன்ராறியோ அரசுக்காக ஒன்ராறியோ அரசினால் வழங்கப்பட்டது.

**Ontario**

# முழுமையான ஒரு வாக்குமூலம்

## கனடா உதயன் பத்திரிகை விநியோகம் செய்தவரும் அவரது துணைவியாரும் "கொரோனா" நோய்க்கு பலியானது தொடர்பாக எங்கும் பரவி நிற்கும் சந்தேகங்களுக்கான ஒரு பதிவு.



கனடாவிலும் உலகெங்கிலும் உள்ள உதயன் வாசக அன்பர்கள், நெருங்கிய நண்பர்கள், ஊடக நண்பர்கள், வர்த்தகப் பெருமக்கள் மற்றும் ஏனைய அன்புள்ளங்கள் அனைவருக்கும் வணக்கம்.

கனடாவில் இப்போது பகல் நீங்கி, ஆதவன் அகன்று போய் இரவைத் தரிசித்து தூக்கத்தை அணைத்திருக்கும் இந்த வேளையில் நாம் விழித்திருக்கின்றோம்.
உங்களோடு பேசுவதற்காக....

இன்று கனடாவில் "கொரோனா" பறித்துச் சென்ற உயிர்கள் நேற்றைய எண்ணிக்கையை விட குறைந்துள்ளது என்பதை அறிந்து சற்று ஆறுதல் அடைவோம்.

"கொரோனா" என்னும் கொடிய நோயின் தாக்கத்திற்குள்ளாகி மரணித்த நண்பன் நாகராஜா தேசிங்குராஜா (சோதி) என்னும் எமது "உதயன்" நண்பரும் அவரது துணைவியார் தங்கம் என்று அன்பாக அழைக்கப்பெற்ற புஸ்பராணியும். இன்னும் இறப்பிலும் ஒன்றாகவே நித்திய உறக்கத்தில் உள்ளார்கள். அக்கினி இன்னும் அணைக்கவேயில்லை.

கனத்த இதயங்களுடன் இந்த அன்புத் தம்பதியின் மூன்று இளவரசிகளும் உலகெங்கும் உள்ள அவர்களது உறவினர்களும் நண்பர்களும் மரணித்த தம்பதிக்கு "சென்று வாருங்கள்" என்று வழி அனுப்பி வைக்க காத்திருககின்றார்கள்
நோயின் ஆதிக்கம் காரணமாக நெருங்கிய உறவினர்கள் கூட அவர்களின் உயிரற்ற உடல்களை பார்க்க, அருகில் செல்லா வண்ணம் சுகாதார அமைப்பின் தடை.
எமக்கும் அதே நிலைதான்.

புதல்விகளான மூன்று இளவரசிகள் கூட தங்கள் வீட்டில் இருந்த வண்ணம் பெற்றவரை எண்ணிய வண்ணம் கண்ணீர் சிந்தி கதறி அழுதபடி உள்ளார்கள்.

"கொடிது கொடிது கொரோனா கொடிது" என்பது மேலும் உறுதியாகிவிட்டது.

இதற்கு முன்னர் பல இடங்களில் நாம் குறிப்பிட்டிருந்தது போன்று, நாமும் சோதி தம்பதி இருவரினதும் உயிர் பிரிந்த கடந்த 13ம், 14ம் திகதி நாட்களிலிருந்து விபரிக்க முடியாத வகையில் வேதனைகளை அனுபவித்தோம் மொத்தத்தில் வீழ்த்தப்பட்டுள்ளோம். என்று கூட சொல்லிவிடலாம்.

அந்த அன்புத் தம்பதியின் இறப்புக்கள் சம்பவித்த நாட்கள் தொடக்கம், வீட்டுக்குள்ளும் அலுவலகத்தின் உள்ளும் நாம் அடைபட்டுக் கிடந்து எம்மால் இயன்ற பணிகளைச் செய்துவந்தாலும், வெளியிலிருந்து நான்கு திசைகளாலும் எம்மை நோக்கி வந்த "வசைகள்" என்னும் சுவாலைகள், எம்மை எரித்த வண்ணமே உள்ளன. அதனால் கருகிப்போனவை பல.

குற்றங்கள் எதுவும் செய்யாமலே நாம் "குற்றவாளிகள்" ஆக்கப்பட்டோம். ஒருவரையும் ஏமாற்றாமலே, நாம் "கயவர்கள்" ஆனோம். பாதகம் செய்யாமலே நாம் "பாவி"களானோம் இதை எவ்வாறு விபரிப்பது என்பது தெரியாமல் தடுமாறி நின்றோம். எமது குரலை வெளியில் காட்ட விழைந்த போது அவதூறுகளால் அவமானப்பட்டோம். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி விசமிகள் சிலர் கூட்டாகச் சேர்ந்து எமது குரலை மழுங்கடித்தனர்.

ஆனால் எம்மோடு பல வருடங்கள் பத்திரிகைப் பணிகளில் பயணித்த, பல வருடங்கள் இணைந்து பயணித்த நாகராஜா தேசிங்குராஜா (சோதி) மற்றும் அவரது துணைவியார் தங்கம் என்னும் புஸ்பராணியும் நித்திய உறக்கத்தில்.

அவர்களுக்காக அஞ்சலி செலுத்த வேண்டியவர்களான நாங்கள், அவர்களது மறைவு தொடர்பாகவும் இது தொடர்பாக எம்மீது தொடுக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவும், எமது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளவும் முயல்கின்றோம்.

எமது உதயன் பத்திரிகைப் பிரதிகளை வாரா வாரம் வெள்ளிக்கிழமைகளில் குறிப்பாக ரொரன்ரோ பெரு நகரில், "மேற்கு" என்று நாம் அழைக்கின்ற மிசிசாகா, பிரம்டன், ஈற்றோபிக்கோ, வெஸ்ட்ரன் போன்ற பகுதிகளில் உள்ள தமிழர் வர்த்தக நிலையங்கள் பலவற்றுக்கும் சில ஆலயங்களுக்கும் விநியோகம் செய்கின்ற பணியைச் செய்துவந்த நண்பர் சோதி அவர்கள் முழு நேரத் தொழிலாக, ஒரு கனடிய நிறுவனத்தில் தனது துணைவியார் சகிதம் வேலை செய்து வந்துள்ளார். பியர்சன் விமான நிலையத்திற்கு அருகில் உள்ள அந்த நிறுவனத்தில் தனது பணிகளை முடித்து விட்டு வெள்ளிக்கிழமைகளில் மாத்திரம் எமக்காக ஐந்து தொடக்கம் ஆறு மணி நேரத்தை அர்ப்பணித்தவர் திரு சோதி.

இந்த விநியோகப் பணி என்பது கடந்த 25 வருடங்களாக இடம்பெறுவதால் அது ஒழுங்கு முறைக்குள் அடங்கியுள்ளது. எனவே எமது நான்கு விநியோகஸ்த்தர்களோடும் எமது அலுவலகத்திலிருந்து எவ்விதமான உரையாடல்களும் நடத்தப்பெறுவது இல்லை. மாதம் ஒரு முறையோ அன்றி இருமுறையோ நேரடியாகவோ அன்றி வங்கி மூலமாகவோ அவர்களுக்கு உரிய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

ஆனால் விநியோகம் தொடர்பான முறைப்பாடுகள் ஏதாவது எமக்குக் கிடைத்தால் நாமோ அன்றி எமது அலுவலக உதவியாளரோ அது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களோடு உரையாட வேண்டிய தேவை ஏற்படும்.

ஆனால், திரு. சோதிக்கு ஒப்படைக்கப்பெற்ற பிரதேசங்களில் எவ்விதமாக முறைப்பாடுகள் கிடைப்பதில்லை என்பதால் நாம் அவரோடு உரையாடுவதற்கோ அன்றி சந்திப்பதற்கோ தேவைகள் ஏற்படுவதில்லை. அவர் தனது கடமையை மிகவும் அக்கறையுடன் செய்து வந்தார் என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம்.

இவ்வாறான நிலையில் தான் உலக மக்கள் அனைவரும் "கொரோனா" நோய்க்கிருமியினால் அச்சுறுத்தப்படும் நிலை தோன்றி, பல உயிர்கள் பறிக்கப்படும் மோசமான நாட்கள் ஆரம்பமாகின.

எமது வாரப்பத்திரிகையான "உதயனின்" மார்ச் 20ம் திகதியன்று வெள்ளிக்கிழமையன்று வெளியான பத்திரிகைப் பிரதிகளை திரு சோதி, எவ்வித தடைகளும் இன்றி விநியோகம் செய்தார். கொரோனா தொடர்பான செய்திகளைத் தாங்கி வந்த முதலாவது இதழ் அது தான். தொடர்ந்து மார்ச் 27ம் திகதி வெள்ளிக்கிழமை இதழும் வெளியாக,. அந்த இதழ் பிரதிகளும் சோதி அவர்களால் விநியோகிக்கப்பட்டன. அனைத்தும் சீராகவே இருந்தன.

தொடர்ந்து ஏப்ரல் 1ம் திகதி புதன்கிழமை என்னொடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு வழமைபோல உரையாடினார். சோதி...சுகம் பற்றி இருவரும் விசாரித்துக்கொண்டோம். அந்த வேளையில் அடுத்த வெளியீடான ஏப்ரல் 3ம் திகதிவெள்ளிக்கிழமையன்று பத்திரிகையை வெளியிடுவதில்லை என்றும் தொடர்ந்து எப்போது பத்திரிகையை மீண்டும் வெளியிடுவது என சில வாரங்களுக்குப் பின்னர் தீர்மானிப்போம் என்றும் கலந்துரையாடி, அவருக்குரிய கொடுப்பனவு தொடர்பாகவும் பேசிய வண்ணம் உரையாடல் முடிந்தது.

அன்றைய நாளிலிருந்து எமது இருப்பு வீட்டுக்குள்ளேயும் அலுவலகத்தின் உள்ளேயும் அடங்கியிருந்தது. எமது இணையத் தளத்திலும் முகநூல் பக்கத்திலும் தேவையான செய்திகளையும் தகவல்களையும் கட்டுரைகளையும் தரவேற்றம் செய்த வண்ணம் இருந்தோம். வெளியில் பத்திரிகை தொடர்பாக பணியாளர்க எவரோடும் உரையாட வேண்டிய தேவை ஏற்படவில்லை. ஏப்ரல் 3ம், 10ம் திகதிகளுக்குரிய பத்திரிகை அச்சிடப்படவில்லை. முகநூலிலும் இணையத்தளத்திலும் பகிரப்பட்டன. இவ்வாறாக நாட்கள் கழிந்து செல்கையில் நானும் திரு சோதி அவர்களும் கடைசியாக உரையாடிய ஏப்ரல் 1ம் திகதியிலிருந்து 12 நாட்கள் கழிய, ஏப்ரல் 13ம் திகதி திங்கட்கிழமை இரவு 7.00 மணியவில் அலுவலகத்தில் முகநூல் பக்கத்தைத் திறந்த போது, எமது விளம்பரதாரர்களான அமல் அபி அவர்களது பதிவாக ஒரு பெண்மணியின் புகைப்படமும் அவர் கொரோன நோய் தொற்றுக் காரணமாக மரணத்தைத் தழுவினார் என்றும் இருந்தது. படத்தை உற்றுநோக்கிப் பார்த்தபோது, எமக்கு தெரிந்தவர் போன்று இருந்தது. பின்னர் அவர் திரு. சோதி அவர்களின் துணைவியார் புஸ்பராணி போன்று உள்ளதை உறுதி செய்யும் வகையில் நாகராஜா தேசிங்குராஜா என்ற பெயரில் உள்ள முகநூல் பக்கத்திற்குச் சென்று பார்த்தால் அங்கு திரு. சோதியோடு இணைந்து நிற்கும் துணைவியார் புஸ்பராணியின் புகைப்படத்தைத் தான் தனியாக வெட்டியெடுத்து மரணம் பற்றிய செய்தியாக உள்ளதை உறுதி செய்து கொண்டோம்.

அடுத்து நண்பர் சோதியோடு தொடர்பு கொள்வதா? அன்றி அமல்-அபியோடு தொடர்புகொள்வதா? என்று குடும்ப உறுப்பினர்களோடு கலந்துரையாடிவிட்டு திருமதி அபி அமல் அவர்களை நானே தொடர்கொண்டேன். உடனடியாகவே எனது அழைப்புக்கு பதிலளித்த திருமதி அபி, தனது உறவினரான தங்கம் என்னும் திருமதி புஸ்பராணியின் மரணத்தை உறுதி செய்ததோடு, எமது நண்பரும் புஸ்பராணியின் கணவருமான திரு சோதியும் "கொரோனா" வின் தாக்குதலால் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுவதாகக் அறிந்ததாக, சோகத்தோடு கூறினானர்.

இந்தச் செய்தி எம்மை மிகவும் தாக்கி நின்றது. ஒரு மரண பயத்தோடு நித்திரைக்குச் சென்றாலும் தூக்கம் எம்மை அணைக்கவே இல்லை.

இந்த இழப்பு தொடர்பான தகவலையும் எமது பணியாளர் சோதி அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பெற்ற செய்தியையும் முகநூலில் பதிவுசெய்தோம்.

14ம் திகதி காலையில் எழுந்து உடனேயே சோதி அவர்களது பிரம்டன் தொலைபேசிக்கு அழைத்தேன். கடைசி செல்ல மகள்தான் தொலைபேசியை எடுத்து அழுத வண்ணம் இருந்தார்.
"தங்கச்சி! அழவேண்டாம். அம்மா காலமானதை அறிந்தேன். அதிர்ந்து போனேன். அப்பாவின் சுகம் எப்படி? "என்று கேட்டேன்.

வீறிட்டு அழுதவண்ணம் "அப்பாவும் இப்ப கொஞ்ச நேரத்திற்கு முன்னர் போய்ட்டார்" என்று கூறினார்.

நானும் எனது துணையாரிடம் இந்த செய்தியைச் சொல்லிய வண்ணம் அந்த பிள்ளையிடம் ஆறுதல் சொல்லி, பின்னர் தொடர்பை துயரத்தோடு துண்டித்தோம்.

தொடர்ச்சி: 9ம் பக்கம்

8ம் பக்கத் தொடர்ச்சி

எமக்கு நன்கு வேண்டிய ஒருவர், எமக்காக தனது நேரத்தையும் விசுவாசத்தையும் அர்ப்பணித்தவர் என்ற வகையில் சோதி-புஸ்பராணி தம்பதியின் இழப்பு தாங்கிக்கொள்ள முடியாத ஒன்றாக இருந்தது.

அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் இருந்தது. எங்கேயும் போகமுடியாது. மூன்று இளவரசிகளிடத்தில் நேரில் சென்று அவர்களைத் தேற்ற முடியாது. சோதி தம்பதியின் பூதவுடல்களையாவது இறுதியாகச் சென்று பார்க்க முடியாது.

கொரோனா என்றும் கொடிதான கிருமி எல்லாவற்றுக்கும் தடையாக இருந்தது.

அடுத்தது என்னசெய்வது? எம்மிடத்தில் இந்த இரண்டு கொரோனா இழப்புக்கள் தொடர்பாக என்ன பொறுப்புக்கள் உள்ளன? இவை பற்றி எங்கேயாவது அறிவிக்க வேண்டிய தேவை உள்ளதா? அல்லது சோதி அவர்கள் இறுதியாக பத்திரிகை விநியோகம் செய்த மார்ச் 27ம் திகதிய பத்திரிகை இதழ்கள் பற்றி அறிவிப்புக்கள் எதையும் வெளியிட வேண்டுமா? என்பதையெல்லாம் பற்றி சிந்திக்க முடியாத வண்ணம் அதிர்ச்சியில் உறைந்து போனோம்.

மறைந்த சோதி தம்பதியின் அன்புப் பிள்ளைகள் எவரோடும் அதற்குப் பின்னர் பேச முடியாமல் போய்விட்டது. தொலைபேசியில் அழைத்தபோது, பதிலளிக்க எவருமே இல்லை. கண்கள் கட்டப்பட்டவர்களாக இருந்தோம்.

இவ்வாறு ஓரிரு நாட்கள் கழிந்து செல்கையில் எமக்குப் பாதகமான சம்பவங்கள் இடம்பெறத்தொடங்கின.

சில இலக்கங்கள் தெரியாத தொலைபேசிகளிலிருந்து எம்மை அழைத்துத் திட்டித் தீர்த்தார்கள்.

சோதி குடும்பத்தின் நெருங்கிய உறவினர்கள் இருவர் அந்த நேரத்தில் எம்மோடு இலக்கம் தெரியும் தொலைபேசி அழைப்புக்களை ஏற்படுத்தி எமக்கு சொல்லிய ஆறுதல் வார்த்தைகளும், தகவல்களும் மனச் சுமைகளை இறக்கி வைத்தன.

இவ்வாறு நேரம் கடந்து செல்கையில் 16ம் திகதி வியாழக்கிழமை இரவு அலுவலகத்தில் நாம் பத்திரிகைக்கு உரிய இணையத்திற்கான பக்கங்களை தயார் செய்து கொண்டிருந்தபோது எமது உறவினர்களில் ஒருவர் அழைத்து இங்குள்ள வானொலி ஒன்றில் சோதி தம்பதியினரின் மறைவு தொடர்பாகவும் கொரோனா தொடர்பாகவும் எமது “உதயன்“ தொடர்பாகவும் நேயர்களோடு ஒரு கலந்துரையாடல் இடம்பெறப்போகின்றது கேளுங்கள் என்று தெரிவித்தார்.

எமது பத்திரிகையும் இந்த உரையாடலில் சம்பந்தப்படுகின்றது, நண்பர் சோதி தம்பதியின் இழப்புக்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படுகின்றது என்ற எண்ணத்தில் வானொலிக்கருகில் சென்றோம்.

கலந்துரையாடலில் எமது பத்திரிகையை மட்டுமல்ல இங்கு வெளிவருகின்ற அனைத்து பத்திரிகைகளும் “குப்பை காகிதங்களே“ என்னும் அர்த்தத்தில் கலந்துரையாடலை வானொலி சார்பில் நடத்தியவர் பேசிக்கொண்டிருந்தார்.

அவரது கருத்துக்களுக்கு எதிராக தங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டவர்கள் நடத்துனரால் இடை மறிக்கப்பட்டார்கள்.. பத்திரிகைகளையும் உதயன் நிறுவனத்தையும் கண்டித்தோ அன்றி ஏளனத்தோடோ பேசியவர்கள் நடததுனரால் வரவேற்கப்பட்டார்கள்..

எனவே இந்த கலந்துரையாடலில் நானும் பங்கெடுத்து எனது கருத்துக்களை தெரிவிக்க வேண்டியது மிக அவசியம் என்று கருதி வானொலியின் இலக்கத்திற்கு அழைத்து எனது இணைப்பிற்காக காத்திருந்தேன்.

எனக்குரிய வழியைத் திறந்துவிட்டார் நடத்துனர். அறிமுகம் செய்து கொண்டு நான் சாதாரமாக கூறினேன் “நீங்கள் எமது நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவரையும் அழைத்திருக்க வேண்டும்” என்று. பின் உரையாடலுக்குள் சென்றேன். ஆனால் எனது கருத்துக்களுக்கு அங்கு மதிப்பளிக்கப்படவில்லை, நான் கூறிய கருத்துக்கள் பொய்யானவை என்றும் பொய்யன் என்றும் அர்த்தப்படும் வகையில் நான் அவமானப்படுத்தப்பட்டேன். பத்திரிகை பற்றி மிகுந்த தரக்குறைவாக விமர்சனங்களை முன்வைத்தார் நடத்துனர்.

அதைத்தொடர்ந்து நானும் எனது கண்டனங்களைத் தெரிவித்தேன். எதிர்பாராத தாக்குதல்களால் தடுமாற்றம் அடைந்து, நான் வேதனை அனுபவித்தேன். துக்கம் தொண்டையை அடைக்க வார்த்தைகள் வெளிவராமல் அடைத்த தொண்டையோ அடங்கிப் போயின. உண்மைகளை ஒப்படைக்க முடியாமல் உதவிக் கரங்கள் எவையும் அற்றவனாக நான் வான் அலைகளிலிருந்து வெளியேறும் நேரம் வரவே விலகிக்கொண்டேன்

பின்னர் சிந்தித்துப் பார்த்தபோது... “நான் இந்த குழியை எட்டிப் பர்த்திருக்கக் கூடாது” என்று என்னையே சுய விமரசனம் செய்து கொண்டேன்.

இன்னொரு விடயத்தாலும் “அன்று காலை தொடக்கம் நான் துன்பங்களை அனுபவித்தேன், துரத்தப்பட்டேன். அதுதான் பெற்றோரை இழந்த அந்த இளவரசிகளின் எதிர்காலத்திற்கா நிதி சேகரிக்க முனைந்த இளம் வயது நண்பிகளின் திட்டம். மிகுந்த நேர்த்தியாக ஒரு கனடிய நிறுவனத்தினால் நடத்தப்பெற்ற இந்த நிதி சேகரிப்பு முயற்சிக்கும் தடைகளும் திட்டுக்களும் நிறையவே வந்த வண்ணம் இருந்தன.

காரணம் மேற்படி நிதி சேகரிப்புத் திட்டம் பற்றிய செய்தியை விபரமாக எனது முகநூலில் “பதிவு” செய்திருந்தேன்.

“ஐயோ” என்று நான் கூக்குரல் எழுப்பும் வகையில் தொலைபேசி அழைப்புக்களும், பதிவுகளும் என்னை வருத்தின.

மறைந்த சோதி தம்பதியின் இழப்பை முன்னிட்டு, அவர்களது மூன்று பிள்ளைச் செல்வங்களின் எதிர்காலம் கருதி, அவர்களில் ஒருவரோடு ஒன்றாக பல்கலைக்கழகத்தில் கற்ற மாணவ மாணவிகள் சேர்ந்த ஏற்பாடு செய்த இந்த நல்லதோர் நிதி சேகரிப்புத் திட்டத்திற்கு நாற்புறமும் இருந்து எதிர்ப்புக்கள்.

எனக்கு செய்திகள் வந்தன “இந்த தொகையில் அரைவாசி உனக்கா?” என்று. மீண்டும், இப்படியும் ஒரு அவமானமா?

என்னைப்போலவே அந்த நிதி சேகரிப்புத் திட்டத்தை அறிமுகம் செய்த இளம் ஆண், பெண் நண்பர்களும் முகம் காட்டாத சிலரால் அச்சுறுத்தப்பட்டார்கள். இறுதியாக நானும் எனது முகநூல் பக்கத்திலிருந்து அதற்கான பதிவை அகற்றினேன்.

விசமிகளின் எச்சரிக்கைகளுக்கு முகம் கொடுக்க முடியாதவகையில் அதனை ஆரம்பித்த நண்பர்களும் நண்பிகளும், அருமையான முயற்சியை அதுவும், இரண்டு இலட்சம் டாலர்களை அடையக் கூடிய நிலையில்... ஒரு இலட்சத்து பத்தாயிரம் டாலர்களோடு நிறுத்த வேண்டிய சூழ்நிலைகளுக்குள் தள்ளப்பட்டார்கள். சரி! இனி இந்த துன்பியல் அனுபவத்தை தொடராமல், நிறுத்தி விட்டு... முக்கியமான விடயம் ஒன்றுக்கு வருகின்றேன். அத்துடன் இது காலம் பிந்தி அறிவிக்கப்படுகின்ற விடயம் என்ற வகையில் அதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொளகின்றேன். உங்களில் ஆயிரக்கணக்கானவர்கள், இதனைத் தான் கடந்த இரண்டு நாட்களாக என்னிடத்தில் வேண்டி நின்றார்கள்.

நான் முன்னர் சொல்லியது போன்று தகுந்த நேரத்தில் அறிவிக்க வேண்டிய ஒரு செய்தியை இன்று சோதி-புஸ்பராணி தம்பதியின் உடல்கள் தகனத்திற்கு முன்பதாக, எமது வாசகர்கள், வர்த்தக அன்பர்கள் மற்றும் நண்பர்களுக்கு ஒரு வேண்டுகோளை எமது உதயன் நிறுவனம் சார்பாக சமர்ப்பிக்கின்றேன். “கடந்த மார்ச் மாதம் 27ம் திகதியன்று வெளிவந்த உதயன் பத்திரிகையை மிசிசாகா, பிரம்டன், ஈற்றோபிக்கோ, வெஸ்ட்ரன் போன்ற பகுதிகளில் உள்ள தமிழர் வர்த்தக நிலையங்கள் மற்றும் சில ஆலயங்களில் பெற்றுக்கொண்டவர்கள், ஒரு முன்னெச்சரிக்கையாக, உங்களை வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்துங்கள். நோய்த் தொற்று எதுவும் இல்லை என்பதை உறுதி செய்துகொள்ளுங்கள்“. இது உங்களுக்கு மட்டுமன்றி இந்தச் சமூகத்துக்கும் பயனுள்ளதாக இருக்கும்.

மேலும், இறுதியாக, எமக்கேற்பட்ட அவதிகளுக்கும் அவமானங்களுக்கும் “மருந்து“ தடவியதைப்போன்று, பல வழிகளிலும் எம்மோடு தொடர்பு கொண்டு எமக்கு ஆறுதல் வார்த்தைகளைக் கூறி தேற்றியவர்களுக்கும்ஊடக நண்பர்களுக்கும் ஏனைய நண்பர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

மீண்டும் முகநூல் மூலமாகவோ, இணையத் தளம் மூலமாகவோ அன்றி நேரிலோ கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வோம்.

நன்றி!

**இங்ஙனம்**
**நாகமணி (லோகன்)**
**லோகேந்திரலிங்கம்**
20-04-2020




**Preparation of Income Taxes**
**T1 and T2 with E/File**

**Location :**
**Unit 9- 40 Winges Road**
**Woodbridge, ON**
**L4L 6B2**

**Pearl Fortune Canada**
**Head Office**
**101 Laird Drive, Markham,**
**Ontario L3S 3N6**
**Office Number 905-554-5606**
**Fax Number 905-554-3236**



**Please contact:**
**Yo K Gamar ( C.M.A)**
**Cell : 416-917-7263**
**Accountant since 1993**

# கொரோனா வைரசின் தாக்கத்தில் இருந்து தப்பித்துக்கொள்ள சில அறிவுரைகள்

டாக்டர் செல்வராணி பத்மபாஸ்கரன், லண்டன் எப்சம் பொது மருத்துவமனை வைத்தியசாலையில் மயக்க மருந்து நிபுணராக (Anesthesiologist) பணியாற்றுகின்றார். ஆனால் அவர் தற்போது மயக்க மருந்து கொடுப்பது மட்டுமல்லாது அதி தீவிர சிகிட்சை பிரிவிலும் கடமையாற்றிவருகின்றார்.

கொரோனா வைரசின் தாக்கத்தில் இருந்து தப்பித்துக்கொள்ள சில அறிவுரைகளை தமிழ் மக்களிடம் பகிர்ந்து கொள்கின்றார். விரும்பியோ விரும்பாமலோ கொரோனா வைரஸ் எங்களுக்குள் ஊடுருவிக் கொண்டிருக்கிறது. வைரசினால் தாக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடிக்கொண்டே போகிறது. இந்த வைரஸ் முக்கியமாக நுரையீரலைத் தாக்க முயல்கிறது.

நுரையீரலைத் தாக்கும் பொழுது எங்களுடைய மூச்சின் ஆக்சிஜன் அளவு குறைகிறது. இதற்கு காரணம் முக்கியமாக இந்த வைரஸ் நமது நுரையீரலின் வெளிப்பாகங்களை அதாவது உள்ளே சென்று அதன் கரைப் பக்கங்களை முக்கியமாக தாக்குகின்றது. எனவே இந்த வைரஸ் தாக்கத்தில் இருந்து தடுக்கும் முறையாக ஒரு சில முறைகளை கையாள்வது நல்ல பலனை கொடுக்கும்.

1. நீராவியில் நீண்ட மூச்செடுத்து மூச்செடுத்து ஆவி பிடிப்பதால் இந்த வைரஸ் தாக்கத்தை உங்களால் குறைக்க முடியும். இந்த நீராவிக்கான நீரின் கொதிநிலையானது 60 டிகிரிக்கும் மேல் இருக்கவேண்டும். அந்த கொதநிலையில் இந்த வைரஸ் உயிரோடு இருக்காது. அத்துடன் மூச்சு துவாரங்கள் வாயினால் நீராவியை எடுக்கும்போது அதில் ஒளிந்திருக்கும் வைரசையும் அழிக்க முடியும்.

2. யோகா பயிற்சி செய்பவர்கள் உங்களது மூச்சுப் பயிற்சியை தொடர்ந்து செய்வதால் இப்படியான வைரஸின் தாக்கத்தை குறைக்க முடியும்.



இதையும் மீறி இந்த வைரஸ் உங்களை தாக்கினால் அதற்கு செய்ய வேண்டிய மருத்துவ முறைகள் பின்வருமாறு:

1. கொதிக்கும் தேனீர்கள் அடிக்கடி குடிக்க வேண்டும்.

2. குப்புற படுக்க வைப்பதன் மூலம் நுரையீரலின் தாக்கத்தைக் குறைக்க முடியும். அப்படி குப்புற படுப்பது சிரமாக இருந்தால் இரண்டு தலையணைகளை வயிற்றில் வைத்து முகத்தை ஒரு பக்கம் திருப்பி நீண்ட மூச்சு எடுப்பதால் இந்த வைரசின் தாக்கத்தை குறைக்க முடியும்.

அதி தீவிர சிகிற்சையில் இருக்கும் நோயாளிகளின் ஆக்சிசன் குறையும் கட்டத்தில் நாங்கள் அவர்களை குப்புற படுக்கவைத்து சில முன்னேற்றங்களை காண்கிறோம். அத்துடன் கொரோனா வைரஸ் உள்ளாகியவர்களின் நோயின் தாக்கம் இருதயத்தையும் சிறுநீரகத்தையும் தாக்கி வருகிறது. இது மிகுந்த சவாலை ஏற்படுத்தி உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

# வரலாற்றில் மறந்திவிடமுடியாத மாபெரும் ஈழத்துக் கலைஞன் ஏ.ரகுநாதன் மறைந்தார்...



ஈழத்தின் நாடக, திரைப்பட வரலாற்றில் மறந்திவிட முடியாத மாபெரும் கலைஞன் ஏ.ரகுநாதன் என்பதில் மாற்றுக்கருத்தேதுமில்லை.

வாழ்நாளில் சாதனைகளை நிகழ்த்திக்காட்டியவர். 05-05-935 இல் மலேசியாவில் பிறந்தாலும், தன் சிறுபராயம் தொட்டே யாழ்ப்பாணம் நவாலியில் தன் தாயுடன் வாழ்ந்துவந்தார். தனது கல்வியை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பயின்றார்.நாடகக் கலைக்குப் பெயர் பெற்ற மானிப்பாய்,நவாலியில் தன் ஆர்வத்தை வெளிப்படுத்த மானிப்பாய் இந்துக் கல்லூரி பெரிதும் உதவியது.

நானும் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் க.பொ.த உயர்தரம் பயின்ற காலத்தில் கல்லூரி இல்லங்களிடையே நடைபெறும் நாடகப்போட்டிகளில் மத்தியஸ்தராக,பார்வையாளராக,சிறப்பு விருந்தினராக வந்து நம்மைப்போன்றவர்களை ஊக்குவித்ததும் இன்றும் மறக்கமுடியாதது.

சுந்தரர் இல்ல போட்டி நாடகமான "மூன்று துளிகள்" கலைஞர் (அமரர்) நற்குணசேகரன் (1933-2020) இயக்கினார்.நாடக ஒத்திகையின் போதும், அதன் பின்னரும் நாடகம் பற்றிய பல அரிய விடயங்களைப் பகிரும் ஒரு நண்பராய் திரு.ஏ.ரகுநாதன் ஆனார். கலை ஆர்வத்தில் தன் அரச பதவியே இராஜினாமச் செய்திருந்தார். கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் நாடகங்களை அரங்கேறிய அனுபவங்களைப் பலதடவைகள் என்னுடன் பகிர்ந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் லிபர்ட்டி பிலிம்ஸாரின் "உறங்காத உள்ளங்கள்" திரைப்படத்தை ஆரம்பித்து அதற்கான சில காட்சிகளும் படமாக்கப்பட்ட சூழலில் அது தொடரமுடியாது போனது.

ஏற்கனவே கடமையின் எல்லை,நிர்மலா,நெஞ்சுக்கு நீதி,தெய்வம் தந்த வீடு, புதிய காற்று போன்ற ஈழத்துத் திரைப்படங்களில் நடித்து பலரது பாராட்டையும் பெற்றிருந்தாலும் நாடகமே தன் மூச்சு என அடிக்கடி சொல்வார்.

கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் பாராட்டுடனும்,பயிற்சியுடனும் "தேரோட்டி மகன் உட்பட பல நாடகங்களில் நடித்தார்..தேரோட்டி மகன், சாணக்கியன், வேதாளம் சொன்ன கதை, அவனைக் கொன்றவள் நீ, சலோமியின் சபதம், பார்வதி பரமசிவம், ஆராவமுதா அசடா எனப் பல நாடகங்கள் பலரின் பாராட்டைப் பெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

1966 இல் வெளிவந்த கடமையின் எல்லை திரைப்படத்திற்குப் பிறகு 1968இல் நண்பர்களுடன் இணைந்து "நிர்மலா எனும் திரைப்படத்தைத் தயாரித்தார்.தமிழக திரைப்படங்களின் அனுபவம் மிக்க இவரின் நண்பரின் கைவண்ணமும் இணைய நல்லதொரு படமாக வெளிவந்தது.நல்ல விமர்சனங்களைப் பெற்றுத்தந்தாலும் நம்மவர்களின் தென்னிந்திய சினிமாமோகம் தயாரிப்பாளரின் கையைச் சுட்டுக்கொள்ளும் நிலைமை வந்தது. ஆனாலும் ரகுநாதனின் உற்சாகம் அதிகமாகவே ஏற்பட முனைப்புடன் செயல்பட்டார்.அதன் தொடர்ச்சியாகவே வி கே டி பொன்னுச்சாமியின் தயாரிப்பில் இலங்கையில் முதன் முதலில் சினிமாஸ்கோப் வடிவில் வெளிவந்த "தெய்வம் தந்த வீடு திரைப்படத்தை 1978இல் வெளியிட்டார். ஆர்வமுள்ளவர்களை,அனுபவம் மிக்கவர்களை தேடிச்சென்று ஊக்கம் கொடுப்பதுடன்,தன்னுடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பையும் ஏற்படுத்தியவர்.

பலதிரைப்படங்கள் வெளிவரவிருந்த சூழல்,பல ஆரம்ப பூஜைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட படங்கள் எனச் சிறப்பான வெளிச்சம் வரவிருந்த சூழலில் தான் 83 ஜூலைக்கலவரம் எல்லாவற்றையும் புரட்டிப்போட்டது.வாழமுடியாத சூழலிலே புலம்பெயர்ந்தார். தமிழகத்தில் இருந்த காலங்களிலும் தன கலை முயற்சியை விடவில்லை.

பின்,பாரிஸ் வந்துசேரவே, கலைகள், கலைஞர்கள் சங்கமிக்கும் நாடாக பாரீஸ் இவருக்காகியமையினால்,நாடகம்,குறும்படங்கள், திரைப்படங்கள் எனத் தொடர்ந்தார். அவற்றுள் இன்னுமொரு பெண், முகத்தார் வீடு, பேர்த்தி, நினைவு முகம், மௌனம், தயவுடன் வழிவிடுங்கள், தீராநதி, மீளுதல், தொடரும், முள்ளும் மலராகும், மாறுதடம், பூப்பெய்தும் காலம், தொடரும், அழியாத கவிதை, இனியவளே காத்திருப்பேன் (2012), WITNESS IN HEAVEN சாட்சிகள் சுவர்க்கத்தில் (2018) குறிப்பிடத்தக்கன.

எனது வீட்டுக்கு வந்தபோது நிறையப் பேசிய பொழுதுகளில் புலம்பெயர்ந்து வாழ்கின்ற நமது கலைஞர்களை ஒன்றிணைத்து நீண்டது திரைத் தொடரை ஆரம்பிக்க இருப்பதாகச் சொன்னார். லண்டன் ஈழவர் திரைக்கலை மன்றம்.`.ஈழவர் சினி ஆர்ட்ஸ் கிரியேஷன்ஸ் அமைப்பினரும் இணைந்து செயல்பட்டதால் அங்கும் ரகுநாதனைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.2009இற்குப் பின்னர் ஏற்பட்ட அசாதாரண சூழலினால் ஈழவர் திரைக்கலை மன்ற செயல்பாடுகள் பற்றிச் சரிவரத்தெரியாததினால் ரகுநாதனைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படவில்லை.ஆனால் இடையே தொலைபேசி ஊடாகத் தொடர்புகொண்டு பேசுவதுண்டு எனினும் பிரான்ஸ் செல்லும் காலங்களிலும் சந்திக்கும் சூழலும் ஏற்படவில்லை. ஹஎழுத்தாளர் விபரத்திரட்டு ஒன்றினை வெளியிடும் ஆர்வத்தில் தொடர்புகொண்டு சில தகவலைப் பெற்றுக்கொண்டேன். ஹஈழத்து நூல் கண்காட்சியினை ஆரம்பிக்கவென ஆயத்தங்களில் இறங்கியபோது முதலாவது வாழ்த்தைத் தெரிவித்திருந்தார்.அதனையொட்டி ஆரம்பிக்கப்பட்ட காற்றுவெளியில் அவரின் நேர்காணலை வெளியிடவேண்டும் என்கிற ஆதங்கத்தைச் சொல்லியிருந்தேன்.முடியாதுபோயிற்று.இலங்கையிலிருந்தபோது எப்படி என்னுடன் பழகினாரோ அதே போலவே பழகினார்.காற்றுவெளி பற்றிப் பேசிய போதே இலங்கையில் நிழல்(1968) சஞ்சிகை நடத்தியதாகச் சொன்னார்.இதனை அறிந்திருக்கவில்லை.புனிதலிங்கத்தின் "திரை" சஞ்சிகையே ஓரளவு திரையுலக செய்திகளைத் தந்ததாக அறிவேன்.இன்னும் வந்திருக்கலாம்.

பாரீஸ் வந்தபின் "பாரிஸ் முரசு" பத்திரிகைக்கு ஆசிரியாராக இருந்ததாகச் சொன்னார்.சில இதழ்களையும் பார்த்திருக்கிறேன் .பல அனுபவங்களைப் பெற்றவரான ரகுநாதனிடம் வழமையாக எல்லோரிடமும் கேட்பது போல அவ்வனுபவங்களைக் கொண்டு நாவலாக எழுதலாமே எனக் கேட்டிருந்தேன்.பார்ப்போம் என்றார். எனினும் "தமிழன்" இதழில் கலை அனுபவங்களை "ஒரு ஒப்பனை இல்லாத முகம்" எனும் பெயரில் எழுதியாகச் சொன்னார்.அதே போல "எனக்காகப் பூக்கும் (1999)" நாவலையும் தந்தார். திரைப்படத்திற்காக நினைத்திருந்ததை நாவலாக்கியதாவும் சொன்னார். இன்னும் எழுதக்கூடிய அனுபவங்களைக் கொண்டிருந்தவரால் எழுதமுடியவில்லை என்றே நினைக்கிறேன். சிறுகதைகளும்,கவிதைகளும் எழுதியிருப்பாதாக அறியும் பட்சத்தில் அவரின் படைப்புக்களைத் தேடும் முயற்சியும் படைப்பாளர்களின் கைகளுக்கு வருகின்றது.

.ஐரோப்பிய கலைஞர்களின் ஒருங்கிணைப்பில் "எந்தையும் தாயும்", "தூண்டில்காரன்" போன்ற நாடகங்களிலும் நடித்திருந்தார்.

பறாளையூர் பிறேமகாந்தனின் ரோஜாப்பூ இதழுடனும் தொடர்பில் இருந்தார். தனது பங்களிப்பு இல்லையெனினும் அது நாடகமெனினும்,திரைப்படமெனினும் அதன் வெளியீட்டிற்கு உதவியாக இருந்திருக்கிறார் என அறியமுடிகிறது.வாடைக்காற்று திரைப்படத்திற்கும் அவ்வாறே உதவியவர் என அறியமுடிகிறது.

நல்ல வாசிப்பாளரும் கூட.ஆனாலும் நாவல்களை,சிறுகதைகளைப் படமாக்கும் ஆர்வம் இல்லாதவராக இருப்பினும்,திரைக்கேற்ப கதைகள் இருப்பின் படமாகலாம் என்றும் சொல்லியிருந்தார்.

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நிர்மலாவின் புதிய பிரதியை மாணவர்களுக்காக திரையிட்டார். நாடகத்திற்கான நடிப்பு,காட்சியமைப்பு,அதன் கட்டமைப்பு வேறு..திரைப்படத்திற்கான நடிப்பு,வடிவமைப்பு வேறு.அதனைக் கற்றுணர்ந்தவனே நல்ல நடிகனாக பிரகாசிக்க முடியும் என்பார்.

எனது நாடக முயற்சிக்கெல்லாம் ஆலோசனை தந்தவர்களில் பா.சத்தியசீலன்,வீ.ரி.ஏ.வீ'வா இவர்களுடன் கலைஞர்.ஏ.ரகுநாதனும் ஒருவர். எழுத்தாளர்.அப்பச்சி மகாலிங்கம் அவர்களையும் அறிமுகம் செய்து தந்தார்.

இன்று இவற்றையெல்லாம் நினைத்துப் பார்க்கையில் வெகுதூரம் வந்துவிட்டோம் எனினும் இவர்களிடமிருந்து பெற்ற அனுபவமே கடந்துவந்த பாதைகளின் சுவடுகளாய் அமைந்தன என்பேன்.

வாழ்நாள் சாதனையாளரான கலைஞர்.ஏ.ரகுநாதன் இன்று நம்மிடையே இல்லை என்பது நெஞ்சம் கனக்கின்ற நாளாய் ஆகின்றது. வயதின் எல்லைகளும்,நோய்களும் உடலை அலைக்கழிக்கும் போது கனவுகளுக்கான ஆயுளும் குறைந்தே போகுமோ?

எவ்வளவுதான் சாதித்திருந்தாலும்,எத்தனை உயரத்தின் உச்சிக்குப் போனாலும் ஒவ்வொரு கலைஞனுக்குள்ளும் நிறைவடையாத கனவுகளும் இருந்திருக்கும்.
எனினும்,

கலைஞர்.ஏ.ரகுநாதன் நமது ஈழத்துக் கலை உலகின் உச்சத்தைத் தொட்டிருக்கிறார் என்பதே உண்மை.

கலையுலகின் வரலாற்றை இவர் பதிவுசெய்திருந்தார்.இவரின் வரலாற்றைக் காலம் பதிவு செய்யும்.ஈழத்தின் நாடக,திரைப்பட கலைஞர்களை மறந்துவிட்டதுபோல ரகுநாதனின் பணியை கலைஞர்கள் தொடர்ந்து முன்னெடுக்கவேண்டும்.
முல்லைஅமுதன்(இங்கிலாந்து)

**நன்றி: அக்கினிக் குஞ்சு இணையத்தளம் -அவுஸ்த்திரேலியா**

# பயணத்தொடர்

**- பகுதி 25 -**

## பனி பொழியும் தேசத்தில் பத்துநாட்கள்

*முனைவர் வே, சங்கரநாராயணன், சேலம், தமிழ்நாடு*

அக்டோபர் 4ம் நாள் மூன்று நிகழ்ச்சிகளையும் நிறைவு செய்துவிட்டு விடுதி திரும்பும் வழியில் நண்பர் லோகேந்திரலிங்கம் சொன்னார்." நாளை காலை எந்த நிகழ்வும் இல்லை. நன்கு ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். பிற்பகலில் உங்கள் நீண்ட நாட்கள் ஆசை நிறைவேறப் போகிறது. எனது மருமகன் மற்றும் பேரக்குழந்தைகளோடு நாளை நாம் "நயாகரா நீர்வீழ்ச்சி"க்கு செல்லவிருக்கிறோம்" என்று ஒரு இன்ப அதிர்ச்சியைக் கொடுத்தார். இந்தப் பயணத்தொடரை ஆரம்பிக்கும் பொழுதே நயாகரா நீர்வீழ்ச்சியை நேரில் பார்ப்பது என் நீண்டநாள் கனவு என் குறிப்பிட்டிருந்தேன். அந்தக் கனவு அக்டோபர் ஐந்தாம் தேதி நனவானது.

ஆண்டுதோறும் 10 லட்சம் மக்கள் பார்வையிட வருகை தரும் உலகின் புகழ் பெற்ற நீர்வீழ்ச்சி நயாகரா நீர்வீழ்ச்சி. படங்களில் மட்டுமே பார்த்து வியந்திருந்த அந்த நீர்வீழ்ச்சியை பக்கத்திலிருந்து பார்க்கும் வாய்ப்பு கனடா உதயன் வார இதழின் ஆசிரியர் அன்பு நண்பர் திரு ஆர்.என்.லோகேந்திரலிங்கம் மூலம் அன்று கிடைத்தது. கனடாவில், பனி கொட்டும் பிற்பகல் நேரத்தில் எங்கள் பயணம் தொடங்கியது. டொரொன்டோவிலிருந்து 128 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள நயாகரா நீர்வீழ்ச்சி நோக்கி நானும், நண்பர் லோகேந்திரலிங்கமும், அவரது குடும்பம் புறப்பட்டோம்.

நயாகரா நீர்வீழ்ச்சி கனடாவிற்கும் ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்குமான எல்லையில் ஓடும் சுமார் 56 கி.மீ நீளமுள்ள நயாகரா ஆற்றின் பாதி தொலைவில் அமைந்துள்ளது. "நயாக்கராராக்கே" என்ற பழங்குடியினர் வாழ்ந்த பகுதி என்பதாலும், பழங்குடிகளின் நகரான "ஓங்கினியாகர" என்ற நகர பெயரிலிருந்தும் "நயாகரா" என்ற பெயர் வந்திருக்கலாம் என்பது ஆய்வாளர்கள் கருத்து. இது தனியான இரண்டு பெரிய அருவிகளைக் கொண்டது. சுமார் 85மூ நீர் கனடாவில் உள்ள ஹார்ஸ் ' அருவி என ஆங்கிலத்தில் வழங்கப்படும் குதிரை இலாட அருவியிலும், மீதம் உள்ளது அமெரிக்கப் பகுதியில் உள்ள அமெரிக்கன் அருவியிலும் விழுகின்றது. இவை இரண்டும் அல்லாமல் ஒரு சிறிய பிரைடல் வெய்ல் அருவியும் உண்டு. குதிரை இலாட அருவி 792 மீ , அதிக அகலமும் 53 மீ உயரமும் கொண்டது. அமெரிக்கன் அருவி 55 மீ உயரமும், 305 மீ அகலமும் கொண்டது. நயாகராப் பேரருவியில் ஆறு மில்லியன் கன அடிக்கு (168,000 $m^3$) அதிகமான நீரானது ஒவ்வொரு நிமிடமும் பாய்ந்துசெல்கிறது.

அழகிற்கு பெயர்போன நயாகரா அருவி நீர் மின்சாரத்திற்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்குமான ஒரு பெறுமதிமிக்க இயற்கை மூலமாகும். இயற்கை அதிசயமான நயகாரா அருவியின் இரட்டை நகரங்களான நயாகரா ∴பால்ஸ் (நியூ யார்க்), நயாகரா ∴பால்ஸ்(ஒன்டாரியோ) ஆகியவற்றை உள்ளடக்கிய நிலப்பகுதி கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக புகழ் பெற்ற ஒரு சுற்றுலாத்தலமாக விளங்குகிறது. நீரோடத்தை மின்னாற்றல் ஆக மாற்ற இங்குள்ள ராபர்ட்டு மோசசு (Robert Moses) மின் நிலையமும், ஆடம் பெக் (Adam Beck) என்னும் இரு மின் நிலையங்களும் சேர்ந்து 4 கிகா வாட் (4,000,000 கிலோ வாட்) மின்னாற்றல் உற்பத்தி செய்கின்றன. இது நீரோட்டத்தைப் பயன்படுத்தி ஆக்கும் மின்னாற்றல் ஆகையால், சுற்றுப்புற சூழலில் பெருங்கேடு ஏதும் விளைவிப்பதில்லை.

நயாகரா நீர்விழ்ச்சியில் ஆண்டு முழுவதும் இரவு நேரத்தில் ஒளிக்காட்சி உண்டு. அருவியின் மீது வண்ண விளக்குளால் ஒளி பாய்ச்சப்பட்டு, வண்ண வண்ண அருவி போல் காட்சி தரும். அதற்கு ஏற்றார்போல் இசையும் இசைக்கப்படும். குளிர் காலம், கோடை, இலையுதிர்காலம் என ஒவ்வொரு காலத்திற்கு ஏற்ப இந்த ஒளிக்காட்சியின் நேரம் மாறுபடும். சிறப்புக் காரணங்களுக்காக, குறிப்பிட்ட வண்ணங்களில் ஒளிக்காட்சிக்கு அனுமதி உண்டு. நயாகரா பால்ஸ் (கனடா), நயாகரா நீர்வீழ்ச்சியில் , 2017ஆகஸ்டு 15ம் தேதி இரவு 10 மணி முதல் பதினைந்து



நிமிடங்களுக்கு இந்திய தேசியக்கொடியின் மூவர்ணத்தில் ஒளிக்காட்சி இடம்பெற்றது. நயாகராவை இதற்கு முன் பல்வேறு நிறங்களில் ஒளிர வைத்திருந்தாலும், இந்திய தேசியக் கொடி நிறத்தில் ஒளிரவைத்தது வரலாற்றில் இதுவே முதல் முறையாகும். இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு, இந்திய தேசியக் கொடியின் மூவர்ணத்தில் ஒளிக்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டது. இது ஏதாவது இந்திய அமைப்புகள் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா என்று கேட்ட போது, அந்த தகவல் அரசு ரகசியம் சாரந்த வி'யம். ஆகையால் அது குறித்து விவரம் சொல்ல இயலாது என்று தெரிவித்தார்கள். யார் வேண்டுமானாலும் பணம் செலுத்தி இத்தகைய காட்சிக்கு ஏற்பாடு செய்யலாமா என்று கேட்டபோது, தக்க காரணங்களுடன் அணுகுபவர்களுக்கு, அரசின் நடைமுறைப்படி ஆராய்ந்து உரிய அனுமதி வழங்கிய பிறகே ஒளிக்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்படும் என்று கூறினார்கள். அதாவது, வெறுமனே குறிப்பட்ட தொகையை செலுத்தினால் மட்டும் இந்த காட்சி அனுமதிக்கப்படுவதில்லை. இந்தியாவின் 70 வது சுதந்திர தினத்தை கனடாவும் சிறப்பிக்கும் வகையில் இந்த மூவர்ண ஒளிக்காட்சி நடத்தப்பட்டது என்று அறிந்தபொழுது கனடா அரசின் மீதிருந்த மதிப்பு மேலும் பன்மடங்காக உயர்ந்தது..

ஐந்தாறு அடி கூட எடுத்து வைக்க முடியாத கால் வலியையும் மறந்து, கவலைகளையும் மறந்து, அந்தி நேரத்தில், அந்த அருவிக்கரையின் ஓரத்தில்..2 கி.மீ தூரம் நடந்த அனுபவம் வியப்பானது..வித்தியாசமானது. பேரக்குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் கவர்ந்திழுக்கும் ஆற்றல் மிக்க அந்த அருவியை அருகில் நெருங்கிய போது எங்கள் மீது தெறித்த நீர்சாரல், இயற்கை அன்னை வரவேற்கும் பன்னீர்த்துளிகளாய் இதயத்தை நனைத்தன.

அன்பு நண்பர் லோகேந்திரலிங்கம் சூடாக வாங்கிக் கொடுத்த டிம் ஹார்டன் காப்பியை சுவைத்தபடி காருக்குத் திரும்பிய பொழுது, பல வண்ண விளக்கொளிகளில் பளபளத்த அந்த நயாகரா நங்கையை பலமுறை திரும்பிப் பார்த்து பரவசம் அடைந்தேன். கனடாவில் அன்றைக்கு நான் செலவிட்ட அந்த இன்மாலைப்பொழுது இன்பத்தின் வரவாய் என்றும் இதயத்தில் தங்கும். (வளரும்)


# மருத்துவ அவசரகால ஏற்பாடு

MEDCENTRE HEALTH
SYNCHRONIZING HEALTH SECTORS

## Markham McNicoll Urgent Care Centre (MMUCC)

* வழமை போல எல்லா நாட்களும் திறந்திருக்கும்
* நீங்கள் வருவதற்கு முன் 416-609-3333 (எமது கிளினிக் தொலைபேசி) எண்ணில் அழைத்துப் பேசிய பின்னரே வரவேண்டும்.
* சிலரின் சிகிச்சை தொலைபேசி ஊடாகவே நிறைவேற்றப்படும். அவர்கள் நேரில் வரவேண்டியதில்லை.
* "கொரணா" அறிகுறியுள்ளோர் தயவு செய்து "Telehealth Ontario" (டெலிஹெல்த் ஒன்றாரியோ) ஐ 1-866-797-0000 என்ற எண்ணில் அழைக்கவும்.
* எமது கிளினிக்கில் "கொரணா" வைரசை சோதிக்கவோ, சிகிச்சையளிக்கவோ வசதிகள் இல்லை.

## Markham McNicoll Family Care Clinic (MMFCC)

* வழமை போல ஞாயிறு & விடுமுறைதவிர்ந்த எல்லா நாட்களும் திறந்திருக்கும்
* நீங்கள் வருவதற்கு முன் 416-292-6666 (எமது கிளினிக் தொலைபேசி) எண்ணில் அழைத்துப் பேசிய பின்னரே வரவேண்டும்.
* சிலரின் சிகிச்சை தொலைபேசி ஊடாகவே நிறைவேற்றப்படும். அவர்கள் நேரில் வரவேண்டியதில்லை.
* Dr. Nusrat Khan புதிய நோயாளர்களை ஏற்றுக் கொள்கிறார்.
* "கொரணா" அறிகுறியுள்ளோர் தயவு செய்து "Telehealth Ontario" (டெலிஹெல்த் ஒன்றாரியோ) ஐ 1-866-797-0000 என்ற எண்ணில் அழைக்கவும்.
* எமது கிளினிக்கில் "கொரணா" வைரசை சோதிக்கவோ, சிகிச்சையளிக்கவோ வசதிகள் இல்லை.

2901 Markham Road, Scarborough, ON M1X 0B6 | www.medcentrehealth.com

MEGA Financial Group
Ruban Lingam
Insurance Agent
Call:647-928-5626
PH28 - 4168 Finch Ave, East
Scarborough, ON M1S 5H6
Web: www.rubanlingam.com
Email: rubanlingam@hotmail.com

தமிழ் பேசும் இளம் சட்டத்தரணியான அரவிந் ஜெகதீசன் அவர்களை அழைப்பதன் மூலம் உங்கள் வழக்குகள், தொழில் சம்பந்தமான பிரச்சனைகள், வீட்டு உரிமையாளர்கள் - குடியிருப்பாளருக்கு இடையிலான வழக்குகள் ஆகியவை தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
437.229.9643
• Employment Law • Wrongful Dismissal
• Severance Packages • Human Rights
• Landlord and Tenant Law • Employment Standards
Aravinth Jegatheesan
Barrister and Solicitor
437.229.9643
email: aro@aravinthlaw.ca www.aravinthlaw.ca
ARAVINTH LAW 920 Yonge St, Suite 510 Toronto, ON, M4W 3CJ

வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated.
Off: 416-298-3200
Dir 647-963-0705

23rd Years in Publishing

UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
On12th October 2019
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
1646 VICTORIA PARK AVE., SUITE 1
PARK PLAZA (BETWEEN LAWRENCE & EGLINTON)
TORONTO, ON. M1R 1P7
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1255 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday April 24, 2020

# தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்தல், சிகிச்சைகளை வடிவமைத்தல், ஆகியவற்றை உள்ளடக்கிய, கோவிட்-19 இற்கு எதிரான ஆய்வு மூலோபாயத்திற்கு ஒரு பில்லியன் டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளது

## ஒட்டாவாவில் பிரதம மந்திரி ஜஸ்ரின் ட்ரூடோ இன்று அறிவித்தார்



கோவிட்-19 குறித்த புதிய தகவல்கள் நாள்தோறும் தெரியவருகின்றன. கனடாவிலும், உலகம் முழுவதிலும் உள்ள ஆய்வாளர்களும், விஞ்ஞானிகளும் வைரஸ் குறித்தும், மக்கள் மற்றும் சமூகங்கள் மீது அது ஏற்படுத்தும் விளைவுகள் குறித்தும் அறிந்து கொள்வதற்குக் கடுமையாக உழைக்கிறார்கள். இந்தத் தகவல்களை உடனுக்குடன் அறிந்து கொள்வதன் மூலம் கனேடியர்களின் ஆரோக்கியம் நன்கு பேணப்படுவதுடன், நாடு மீட்சிப் பாதையில் செல்லக்கூடியதாகவும் இருக்கும்.

தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்தல், சிகிச்சைகளை வடிவமைத்தல், வைரஸ் பரம்பலைக் கண்காணித்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய, கோவிட்-19 இற்கு எதிரான தேசிய மருத்துவ ஆய்வு மூலோபாயம் ஒன்றுக்கு ஒரு பில்லியன் டொலரிலும் அதிகமான பணத்தைச் செலவிடவுள்ளதாகப் பிரதம மந்திரி ஜஸ்ரின் ட்ரூடோ நேற்று வியாழக்கிழமை ஒட்டாவாவில் அறிவித்தார். அறிவித்தார். கொறோனா வைரஸ் ஆய்வுக்கும் அதற்கு எதிரான மருத்துவ நடவடிக்கைகளுக்குமென மார்ச் மாதம் அறிவிக்கப்பட்ட 275 மில்லியன் டொலரின் தொடர்ச்சியாக இந்தப் புதிய நிதி அமைகிறது.

கோவிட்-19 குறித்து விளக்கமாக அறிந்து கொள்வதற்கும், கனடாவில் அதற்கு எதிரான போராட்டத்திற்குத் தேவையான உட்கட்டுமானங்களை உருவாக்குதற்குமாகக் கனேடிய அரசு புதிய மருத்துவ பதில் நடவடிக்கைகளில் முதலிடவுள்ளது. இதில் பின்வருவனவும் உள்ளடங்கியிருக்கும்:

Dr. David Naylor, Dr.Catherine Hankins, Dr. Tim Evans, Dr. Theresa Tam, Dr. Mona Nemer ஆகியோரைக் கொண்ட தலைமைக் குழுவொன்றின் வழிகாட்டுதலில் செயற்படுவதற்கு கோவிட்-19 நோயெதிர்ப்புசக்தி செயலணிக் குழுவொன்று (COVID-19 Immunity Task Force) உருவாக்கப்படும். இந்தச் செயலணிக் குழு, முன்னுரிமை வழங்கப்படவேண்டியவற்றை முடிவு செய்வதுடன், கனடாவில் வைரஸ் எந்த அளவுக்கு விரிவாகப் பரவியுள்ளதெனக் கண்டுபிடித்து அதில் இருந்து கனேடியர்களின் நோயெதிர்ப்புசக்தி, பலவவீனங்கள் ஆகியன குறித்த நம்பகத்தன்மையுள்ள கணிப்பீடுகளை மேற்கொள்வதற்கு நாடு தழுவிய இரத்தப் பரிசோதனைகளை ஒருங்கிணைக்கும் செயலை மேற்பார்வை செய்யும்.

• Genome Canada அமைப்பின் தலைமையில் இயங்கும் கனேடிய கோவிட்-19 மரபணு வலையமைப்புக்கு (Canadian COVID-19 Genomics Network (CanCOGeN)) கனடாவெங்கும் கோவிட்-19 வைரஸினதும், விருந்து வழங்கியினதும் மரபணு வரிசையைக் கண்டுபிடிக்கும் முயற்சியை ஒருங்கிணைப்பதற்கு 40 மில்லியன் டொலர் வழங்கப்படும். வைரஸையும் அதன் வெவ்வேறு திரிபுகளையும், அவை மக்களை எவ்வாறு வெவ்வேறு வழிகளில் நோயுறச் செய்கின்றனவென்பதைக் கண்காணிப்பதற்கும் இந்த ஆய்வு உதவும். இதன் மூலம் கிடைக்கும் பயனுள்ள தகவல்கள் உலகத் தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுக்கும் பொதுச் சுகாதார அதிகாரிகளுக்கும், முடிவெடுக்கும் அதிகாரமுள்ளோருக்கும் உதவியாக இருக்கும். கனடாவில் தடுப்பு மருந்தைக் கண்டுபிடிக்கும் முயற்சி உட்பட, மேலதிக ஆய்வுகளை மேற்கொள்வதற்கு உலகளாவிய ரீதியில் உள்ள ஆய்வாளர்களுக்கு இந்த ஆய்வின் முடிவுகள் வழங்கப்படும்.

• கோவிட்-19 இற்கு எதிரான தடுப்பு மருந்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியை விரைவுபடுத்துவதற்கு Vaccine and Infectious Disease Organization-International Vaccine Centre (VIDO-InterVac) அமைப்புக்கு 23 மில்லியன் டொலர் வழங்கப்படும். கோவிட்-19 இற்குக் கண்டுபிடிக்கப்படும் தடுப்பு மருந்து செயற்திறனுள்ளதெனவும், மனிதர்களில் பயன்படுத்துவதற்குப் பாதுகாப்பானதெனவும் உறுதி செய்வதற்குத் தேவையான முக்கிய நடவடிக்கைகளான மனித பரிசோதனைகளுக்கு முந்திய ஆய்வுகளுக்கும், மனித பரிசோதனைகளுக்கும் இந்தப் பணம் உதவியளிக்கும்.

• கனடா தேசிய ஆய்வுச் சபையின் (National Research Council of Canada) மொன்றியோலில் உள்ள Human Health Therapeutics வளாகத்தில் இன்றியமையாத மேம்பாட்டுப் பணிகளின் இரண்டாம் கட்டத்தை மேற்கொள்வதற்கு 29 மில்லியன் டொலர் வழங்கப்படும். மனித பரிசோதனைக்குத் தேவையான தடுப்பு மருந்தைத் தயாரிப்பதற்கு இந்த வளாகத்தைத் தயார்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையின் தொடர்ச்சியாக, அந்த வளாகத்தில் இடம்பெறும் செயற்பாடுகளுக்கு இந்தப் பணம் உதவியளிப்பதுடன், தடுப்பு மருந்து தயாராகியதும், தனி நபர்களுக்குத் தேவையான அளவுகளில் அவற்றை அடைப்பதற்கான குப்பிகளைத் தயாரிப்பதற்குத் தேவையான கட்டுமானங்களையும் உருவாக்கவும் பயன்படும்.

• தனியார்துறையும், கனேடிய உயிரியல் உற்பத்தித்துறையும் கோவிட்-19 தடுப்பு மருந்து, சிகிச்சை, மனித பரிசோதனை போன்றவற்றை மேற்கொள்வதற்கு மூலோபாய புத்தாக்க நிதியத்தின் (Strategic Innovation Fund) ஊடாக இரண்டு வருட காலப் பகுதியில் 600 மில்லியன் டொலர் வழங்கப்படும். கோவிட்-19 இற்கு எதிரான கனடாவின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு உதவியாக உலகத் தொற்றுநோய் குறித்த தரவுகளை நாடு முழுவதிலும், ஒருங்கிணைப்பதற்கும், பகிர்வதற்குமான கனேடிய தரவுக் கண்காணிப்பு முயற்சியொன்றுக்குப் 10 மில்லியன் டொலர் வழங்கப்படும்.

• தடுப்பு மருந்து தொடர்பான ஆய்வுகள், மனித பரிசோதனைகள் ஆகியவற்றுக்கும், தடுப்பு மருந்தின் பாதுகாப்பையும் அதன் செயற்திறனையும் கண்காணிக்கும் கனடாவின் வல்லமையை மேம்படுத்துவதற்கும் கனேடிய நோய்த்தடுப்பு ஆராய்ச்சி வலையமைப்புக்குத் தற்போது 5 மில்லியன் டொலர் வழங்கப்படுவதுடன், இரண்டு வருட காலப்பகுதியில் 10.3 மில்லியன் டொலரும் வழங்கப்படும். கோவிட்-19 இன் விரைவான பரவலைத் தடுப்பதற்கான மருத்துவ மற்றும் சமூக பதில் நடவடிக்கைகளையும், அதன் சமூக, சுகாதார பாதிப்புக்களைக் குறைப்பதற்கான பதில் நடவடிக்கைகளையும் உருவாக்குவதையும், பரிசோதித்துப் பார்ப்பதையும், நடைமுறைப்படுத்துவதையும் விரைவுபடுத்துவதற்காக கனேடிய சுகாதார ஆராய்ச்சி நிறுவனத்தின் ஊடாக 114.9 மில்லியன் டொலர் வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக, Stem Cell Network இன் ஊடாக இரண்டு ஆய்வுத் திட்டங்களுக்கும், மனித பரிசோதனைத் திட்டம் ஒன்றுக்கும் 675,000 டொலரைக் கனேடிய அரசு வழங்கும். மனித பரிசோதனையின் மூலம், கோவிட்-19 உடன் தொடர்புபட்ட கடுமையான சுவாசத்தொகுதிப் பாதிப்பின் விளைவையும், தீவிரத்தன்மையையும் குறைப்பதற்கான கல சிகிச்சை ஒன்றின் பாதுகாப்புக் குறித்து அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். ஏனைய இரண்டு திட்டங்களும், சுவாசப்பாதையிலும், மூளையிலும் உள்ள கலங்கள் வைரஸால் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பன குறித்த இன்றியமையாத தகவல்களைப் பெற உதவியாக இருக்கும்.

கோவிட்-19 குறித்த ஆராய்ச்சிகளுக்கு உதவியளிப்பதன் மூலமும், கனேடிய விஞ்ஞானிகளின் இன்றியமையாத பணிகளுக்கு ஆதரவளிப்பதன் மூலமும், தடுப்பு மருந்து தொடர்பான முயற்சிகள் மூலமும், கனேடியர்களினதும், உலகெங்கும் உள்ள நலிவடைந்தோரினதும் உடல்நலமும், பாதுகாப்பும் மேம்படுத்தப்படலாம்.

**மேலதிக தகவல்களுக்கும், ஊடகங்களின் கேள்விகளுக்கும்: டொறீன் சவுந்தரநாயகம்**
Gary.Anandasangaree.C1A@parl.gc.ca

Life Insurance
Don't think twice
Life Insurance Group Benefits
Critical Illness RRSP / RESP
Disability
Investments
iNFORCE LIFe Financial Services Inc.
Delivering Promises. Building Trust.
RESP
Registered Education Saving Plans
40% - 20%
Goverment Grant
Plus additional
15-10% on us.
Start Saving Early
Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay:
416.704.8074